மலர்-2 இதழ்-41 மே 1-15 2018 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர் மெயில் புக்

மாதமிருமுறை

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

உலக வரலாற்றில் முதன்முறையாக இமெயிலில் வெளிவரும் புத்தகம்



www.aanmeegamalar.com

## பில்லி, சூன்ய பிரச்சனை தீர்க்கும்

# திருமுல்லைவாயில் பச்சையம்மன்

# தசாவதாரம்



திருப்பாற்கடலில் பள்ளிகொண்டிருக்கும் திருமால், பூலோகத்தைக் காப்பதற்காக ஒன்பது முறை அவதரித்துள்ளார்.

திருமால் எடுத்த அவதாரங்களை வரிசைப்படி பார்த்தால் மனித இனம் தோன்றிய விதமும் ஒத்துப்போகும் வகையில் அமைந்திருக்கும்.

திருப்பாற்கடலில் பள்ளிகொண்டிருக்கும் திருமால், பூலோகத்தைக் காப்பதற்காக ஒன்பது முறை அவதரித்துள்ளார். 10வது அவதாரமாக கல்கி என்ற அவதாரத்தை அவர் எடுப்பார் என்று புராணங்கள் கூறுகின்றன. அந்த தசாவதாரங்களைப் பற்றி இங்கு பார்ப்போம்.

மச்சாவதாரம்: திருமால் எடுத்த முதல் அவதாரம் இது. மச்சம் என்றால் மீன் என்று பொருள். இந்த அவதாரத்தில் தோன்றி மகாவிஷ்ணு, வேதங்களை அபகரித்துக் கொண்டு போய், கடலில் ஒளித்து வைத்திருந்த சோமுகாசுரனைக் கொன்றார்.

கூர்மாவதாரம்: தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்த போது, மந்திரமலையைத் தாங்க திருமால் எடுத்த ஆமை அவதாரமே கூர்மாவதாரம். மலையை அசையும் போது தம் களைப்பு தீர்ந்து, பெருமாள் நன்கு தூங்கிக் களித்ததாக புராணங்கள் கூறுகிறது.

வராக அவதாரம்: பூமியைக் கவர்ந்து சென்ற இரண்யாட்சன், அதைக் கடலுக்கடியில் ஒளித்து வைத்தான். ஆலிலையில் அறிதுயிலில் இருந்த திருமால், வெள்ளை வராகமாக (பன்றியாக) உருவெடுத்து அசுரனைக் கொன்றார். பின்னர் பூமியை தன் கொம்பில் தாங்கிக் கொண்டு அருள் செய்தார்.

நரசிம்ம அவதாரம்: அசுரன் இரண்யகசிபு, நாராயணனே பரம்பொருள் என்று வணங்கி வந்த தன் பிள்ளை பிரகலாதனைத் துன்புறுத்தி வந்தான். பிரகலாதனுக்காக தூணில் இருந்து சிங்க முகத்துடன் வெளிப்பட்ட திருமால், இரண்யகசிபுவை வதம் செய்தார். இந்த அவதாரமே நரசிம்ம அவதாரம்.

வாமன அவதாரம்: பிரகலாதனின் பேரன் மகாபலியின் ஆணவத்தை அடக்க, பெருமாள் எடுத்த குள்ள வடிவம் வாமன அவதாரம். தன் அடியில் மூவுலகங்களையும் அளந்து திருவிக்ரமனாக வானுக்கும், மண்ணுக்கும் உயர்ந்து நின்றார்.

பரசுராம அவதாரம்: ஜமதக்னி முனிவருக்கும் ரேணுகாவுக்கும் மகனாக பிறந்ததே பரசுராம அவதாரம். தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை என்பதை உலகத்திற்கு உணர்த்திய அவதாரம். இன்றும் மகேந்திர மலையில் சிரஞ்சீவியாக தவம் செய்து கொண்டிருப்பதாக ஐதீகம்.

ராமாவதாரம்: ரகு குலத்தில் தசரத சக்கரவர்த்திக்கு மகனாகத் திருமால் எடுத்த அவதாரம் ராமன். ஏகபத்தினி விரதனாக சீதாதேவியை மணந்தும், ராவணனை சம்ஹாரம் செய்தும், தந்தை கொடுத்த சத்தியத்தைக் காப்பாற்றியதும் ராமாவதாரத்தின் சிறப்பம்சங்களாகும். மனிதனின் இன்ப துன்பங்களை அனுபவித்து, மனிதர்களுக்கு முன்னோடியாக விளங்கிய அவதாரம் இது.

பலராம அவதாரம்: கோகுலத்தில் விஷ்ணுவின் அம்சமாக வசுதேவருக்குப் பிறந்த பிள்ளை பலராமன். பெருமாள் வெண்ணிறத்தில் தோன்றிய அவதாரம் இது. ராமாவதாரத்தில் தம்பியாக இருந்த லட்சுமணனை தனக்கு அண்ணனாக விஷ்ணு ஏற்றதாகவும் கூறுவர்.

கிருஷ்ணாவதாரம்: வசுதேவருக்கும் தேவகிக்கும் குழந்தையாக மகாவிஷ்ணு எடுத்த அவதாரம் கிருஷ்ணாவதாரம். இந்த அவதாரத்தில், கண்டவர் தம் மனதை கவரும் அழகுடன் கோபியர் கொஞ்சும் ரமணனாக திருமால் விளங்கினார். கம்சனைக் கொன்றும், பஞ்சபாண்டவரைக் காத்தும் தர்மத்தை நிலைநாட்டினார்.

கல்கி அவதாரம்: ஒவ்வொரு யுகத்தின் முடிவிலும் திருமால் எடுக்கும் அவதாரம் கல்கி. கலியுகத்திலும் இந்த கல்கி அவதாரத்தை எடுத்து, உலக உயிர்களை முக்தி பெறச் செய்வார் என்று புராணங்கள் கூறுகின்றன.





## துர் சக்தியை விரட்டும் குப்பைமேனி செடி

வீண் வழக்கு, மற்றும் துர் தேவதைகளை விலகி ஓட வைத்து நல்ல பலன்களைப் பெற உதவுவது குப்பைமேனி செடியின் வேர் வழிபாடு.

எதிரிகளால் வஞ்சிக்கப்படுத்தல், உறவினர்களால் மற்றும் நண்பர்களால் ஏமாற்றப்படுத்தல், கஷ்ட நஷ்டங்கள், கடன் தொல்லை, தரித்திர நிலை, எதிரி களின் மிகுந்த தொல்லை, தர்ம நியாயம் இல்லாத வம்பு வழக்குகள் அகல விரும்புபவர்கள்.

சனிக்கிழமைகளில் காலை 6 முதல் 7 மணிக்குள் குப்பைமேனி மூலிகையை (செடி) வேர் அராமல் பிடுங்கி எடுத்து வேரை மட்டும் பூஜையில் வைத்து பூஜித்து வர, மேற்சொன்ன அனைத்தும் விலகி ஓடும். கோர்ட், வழக்கு போன்றவற்றிர்க்கு போகும் பொழுதும், எதிரிகள் தொல்லை அதிமாகும் போதும் இதன் வேரை துணையாக எடுத்து சென்றால் நல்ல பலன் கிடைக்கும்.

அக்காலத்தில் காட்டுவழிப் பயணம் மேற்கொண்டவர்கள் குபைமேனி செடியின் வேரை பூஜித்து, காட்டுவழிபயணத்தின் போது துணையாக எடுத்துச் செல்வார்கள், இதனால் துர் சக்திகள் அவர்களை அண்டாது, இன்னும் ஒரு படி மேலே சொல்லவேண்டுமென்றால், இதன்வேரை எடுத்து சென்றால் காட்டு யானைகலும் பயந்து ஓடும் என்பது சித்தர்கள் வாக்கு.



# நினைத்ததை நிறைவேற்றும் துளசி பூஜை..!

அலங்கார பிரியரான திருமாலுக்கு உகந்தது துளசி. திருமாலின் திருமார்பில், மாலையாக மகிழ்வோடு காட்சி தருபவள் துளசி தேவி. துளசி என்ற சொல்லுக்கு தன்னிகரற்றது என்று பொருளாகும். துளசி தீர்த்தத்தால் எனக்கு அபிஷேகம் செய்தால், பல ஆயிரம் அமிர்தக் குடங்களால் அபிஷேகம் செய்த அளவுக்கு ஆனந்தமடைவேன் என்று மகாவிஷ்ணுவே கூறியுள்ளார்.

துளசி பூஜை :

கார்த்திகை மாதம் பவுர்ணமி தினத்தன்று துளசித்தாய் அவதரித்ததாக புராணங்கள் கூறுகின்றன. அன்று துளசித்தாய்க்கு விரதமிருந்து பூஜை செய்வது மிகுந்த பலனை தரும். துளசி பூஜை செய்ய வாரத்தில் செவ்வாய்க்கிழமையும், வெள்ளிக்கிழமையும், கார்த்திகை மாதம் வளர்பிறை துவாதசியும் ஏற்ற நாட்கள் ஆகும்.

துளசி இலை பட்ட தண்ணீர், கங்கை நீருக்கு சமமானதாக கருதப்படுகிறது. துளசி பூஜை செய்வதால் எட்டு வகை செல்வங்களும் கிட்டும். திருமணமாகாத பெண்களுக்கு திருமணம் கைகூடும். துளசி திருமாலுக்கும், திருமகளுக்கும் மிகவும் பிடித்தமானது. துளசி இருக்கும் இடத்தில் மகாவிஷ்ணு நிறைந்து இருப்பார் என்பது ஐதீகம்.

கார்த்திகை மாதம் ஏகாதசிக்கு மறுநாள் துவாதசி அன்று மகாவிஷ்ணு துளசியைத் திருமணம் செய்து கொண்டார். அந்த நாளை பிருந்தாவன துளசி அல்லது துளசிக்கல்யாணம் எனக் கொண்டாடுவார்கள். அன்று காலை சுமங்கலிப் பெண்கள் குளித்துவிட்டு, விரதமிருந்து துளசி மாடத்தை சுற்றி கோலமிட்டு காவி பூச வேண்டும். சாதம், பால் பாயசம், வெற்றிலை, பாக்கு, மஞ்சள், பழங்கள், தேங்காய் வைத்து பூஜை செய்ய வேண்டும். ஒரு விளக்கு திரியை நெய்யில் வைத்து, தீபம் ஏற்றி வணங்க வேண்டும்.

துளசி லட்சுமி வடிவானவள். துளசி செடியுடன் நெல்லிமரக்குச்சி (மகாவிஷ்ணு வடிவம்) சேர்த்து வைக்க வேண்டும். நிவேதனமாக சர்க்கரை பொங்கல் வைத்து வணங்க வேண்டும். துளசி பூஜைக்கு முன்னர் விக்னேஸ்வர பூஜை செய்ய வேண்டும். பூஜை முடிந்ததும் பெண்களுக்கு வெற்றிலை, பாக்கு, பூ, கண்ணாடி வளையல்கள் வைத்து கொடுக்க வேண்டும். ஒரு ஏழை அந்தண சிறுமியை மனையில் அமரவைத்து சந்தனம் பூசி, குங்குமம், புஷ்பம், புதுத்துணி கொடுக்க வேண்டும். பால் பாயசத்தை பாத்திரத்துடன் தானம் கொடுக்கலாம்.

### துளசி பூஜையின் மகிமை:

- ❖ பார்வதி தேவி, துளசி பூஜை செய்ததால் சிவபெருமானின் இடப்பாகத்தைப் பெற்றாள்.
- ❖ அதைப்போல் துளசி பூஜை செய்ததால் அருந்ததிதேவி வசிஷ்டரை மணந்தாள்.
- ❖ ருக்மணி துளசி பூஜை செய்ததால் கிருஷ்ணரை மணவாளனாக அடையும் பேறு பெற்றாள்.
- ❖ கருட பகவான் விஷ்ணுவுக்கு வாகனமாக மாறியதும், அவர் செய்த துளசி பூஜையின் மகிமையால் தான்.
- ❖ சாவித்திரி துளசி பூஜை செய்ததால் தான் தீர்க்க சுமங்கலியாக வாழ்ந்தாள்.
- ❖ விநாயகர் கஜாக சூரனை வென்று விக்னேஷ்வரன் என்ற பட்டத்தை பெற்றதும் துளசி பூஜையால் தான்.

எனவே, அனைவரும் துளசி பூஜை செய்து பயன் பெறுவோமாக.

# எலுமிச்சை பழ விளக்கின் பயன்கள்



கோவிலுக்கு சென்று கடவுளை வழிபடும் போது எலுமிச்சை பழத்தில் விளக்கேற்றுவது இயல்பான விடயமாக இருக்கலாம்.

ஆனால் அதற்கான காரணம் என்ன? எந்த நாளில் விளக்கேற்றினால் அதற்கான பலனை பெறலாம் என்பது தெரியுமா?

எலுமிச்சை பழத்தில் விளக்கேற்றுவது எப்படி?

தோல் மெல்லியதாக உள்ள எலுமிச்சை பழத்தினை எடுத்து கொண்டு அதன் தோலை நெகிழ்வாக உருட்டி செங்குத்தாக சரிபாதியாக வெட்டி, சாற்றினைப் பிழிந்து கொள்ள வேண்டும்.

பின் பாதி எலுமிச்சையை உள்புறம் வெளியே வருமாறு திருப்பி, ஒரு கிண்ணம் போல் செய்து, அதில் எண்ணெய் அல்லது நெய் ஊற்றி திரியிட்டு விளக்கேற்ற வேண்டும்.

எலுமிச்சை விளக்கின் முக்கியத்துவம்?

மாயை, பேராசை, காமம் மற்றும் கோபம் ஆகியவற்றை கடவுளுக்கு முன்பாக வெளியே ஏறிய வேண்டும் என்பதற்காக கடவுளை வழிபடும் போது எலுமிச்சை விளக்கு ஏற்றுகிறார்கள்.

விளக்குத்திரி குறிப்பதன் அர்த்தம் என்ன?

பருத்தியில் செய்யப்பட்ட திரி நல்ல அதிர்ஷ்டத்தையும், தாமரை தண்டில் செய்யப்படும் திரி முற்பிறவி வினைகளை நீக்கி வளமான வாழ்க்கையை உண்டாக்கும்.

வெள்ளை பூண்டு வகை செடியில் செய்யப்படும் திரி, அதிர்ஷ்டம் மற்றும் சொத்துக்களைப் அதிகரிக்க செய்யும்.

# லிங்கங்களும் பயன்களும்



சிவபெருமானை லிங்கவடிவில் வழிபடும் தொடர்பாகப் பல புராண வழக்குகள் உள் ளன. திருமாலுக்கும், பிரமனுக்கும் தம் சக்தியை உணர்த்தப் பேரொளிப் பழம்பாக, அண்ணாமலையாகச் சிவபெருமான் நின்ற வரலாறு அனைவரும் அறிந்ததே, ஜோதி சொருபமே லிங்கம்.

புற்று மண் லிங்கம் – மோட்சம் தரும்
ஆற்றுமணல் லிங்கம் – பூமி லாபத்தைத் தரும்
பச்சரிசி லிங்கம் – திரவிய லாபமும்,
அன்னலிங்கம் – அன்ன விருத்தியையும் தரும்
கோமய லிங்கம் – வியாதியைத் தீர்க்கும்
வெண்ணெய் லிங்கம் – மனமகிழ்ச்சி தரும்
ருத்ராட்ச லிங்கம் – ஞான விருத்தி தரும்
விபூதிலிங்கம் – சகலசவுபாக்கியத்தையும் தரும்
சந்தன லிங்கம் – சகல இன்பத்தைத் தரும்
புஷ்ப லிங்கம் – ஆயுள் விருத்தி கொடுக்கும்
சர்க்கரை லிங்கம் – விரும்பிய இன்பங்களைத் தரும்
மாவு லிங்கம் – உடல் வலிமை தரும்
பழ லிங்கம் – சுகத்தைத் தரும்
தயிர் லிங்கம் – நல்ல குணத்தைத் தரும்
தண்ணீர் லிங்கம் – சகல மேன்மைகளையும் தரும்.
தர்ப்பைப் புல் லிங்கம் – லட்சுமி கடாட்சம்
களிமண் லிங்கம் – மனச்சாந்தி
பசுஞ்சாண லிங்கம் – ஆரோக்யம்

# காயம்பட்ட ஏழுமலையான்

திருப்பதியில் ராமானுஜரின் சீடரான அனந்தாழ்வான் தன் மனைவியுடன் பூந்தோட்டம் அமைத்தார். அவரின் மனைவி கர்ப்பமாக இருந்த நிலையிலும் குளம் வெட்டும் பணியில் ஈடுபட்டார். கர்ப்பிணி பெண் தனக்காக மண் சுமப்பதைக் கண்ட ஏழு மலையான் தொழிலாளி உருவத்தில் தோன்றி உதவி செய்தார். இதைக் கண்ட அனந்தாழ்வான் கோபமுடன், ‘‘எங்க ளுக்கு யாரும் உதவ வேண்டாம். நாங்கள் மட்டுமே பெருமாளுக்கு தொண்டு செய்ய விரும்புகிறோம்,’’ என மறுத்து, தன் கையில் இருந்த கடப்பாரையால் அடித்ததில், தொழிலாளியின் மோவாயில் காயம் உண்டானது. உடனே ஏழுமலையான் தன் உண்மை வடிவைக் காட்ட, அனந்தாழ்வான் தான் செய்ததை எண்ணி வேதனைப்பட்டதோடு காயத் திற்கு மருந்தும் இட்டார். இதன் அடிப் படையில் இப்போதும், திருப்பதியில் ஏழுமலையானுக்கு மோவாய் புண்ணுக்கு பச்சைக் கற்பூரம் சாத்துவர்.



# விரத நாளில் எங்கே சாப்பிடலாம் ?

கார்த்திகை, சஷ்டி போன்ற நாட்களில் விரதம் மேற்கொண்டால் நம் வீட்டில் சாப்பிட்டால் விரத பலன் முழுமையாக கிடைக்கும். மற்றவர் வீட்டில் சாப்பிட்டால் பலன், உணவளித்தவருக்கு சேர்ந்து விடும். காசி, ராமேஸ்வரம் போன்ற புண்ணிய தலங்களிலும் பிறர் அளிக்கும் உணவைச் சாப்பிட்டால் யாத்திரை சென்ற புண்ணியம் அவர்களைச் சேரும்.



# வாழ்வை உயர்த்தும் நற்செயல்கள்

நம் முன்னோர்கள் நம்மை பின்பற்ற வலியுறுத்திய வாழ்வை உயர்த்தும் புண்ணிய செயல்களும், அதற்கான பலன்களும் என்னவென்று அறிந்து கொள்வோம்.

நாம் வாழ்க்கையில் செய்யும் நற்செயல்களின் புண்ணியமே நமக்கு நற்கதி தரும் என்பதை நாம் அனைவரும் அறிவோம். இன்றைய அவசர உலகத்தில் அப்படிப்பட்ட நல்ல செயல்கள் செய்வதை விட, தவறான செயல்களைத் தவிர்ப்பதே பெரும்பாடாய் உள்ளது. நம் முன்னோர்கள் நம்மை பின்பற்ற வலியுறுத்திய வாழ்வை உயர்த்தும் புண்ணிய செயல்களும், அதற்கான பலன்களும் என்னவென்று அறிவோமா?

- வீட்டில் துளசி வளர்ப்பது பாவம் நீங்குவதுடன், உடல் ஆரோக்கியமும் தரும்.
- கல்விக்கு உதவுவது புத்திர பாக்கியம் தருவ துடன், நாட்டையும் உயர்த்தும்.
- கோவில் கட்டுதல் பிறப்பற்ற நிலையைத் தருவ துடன், ஆன்மிகமும் வளரும்.
- குளம் வெட்டுவது கடன்கள் தீருவதுடன் தண் ணீர்ப் பஞ்சமும் தீரும்.
- விரதம் இருப்பது உடல், மனத் தூய்மை பெறுவது டன் மனக் கட்டுப்பாடும் அதிகரிக்கும்.
- சுமங்கலி பூஜை சவுபாக்கியம் பெருகுவதுடன் சந்தோசம் தரும்.
- மரம் வளர்த்தல் லட்சுமி கடாட்சம் ஏற்படுவதுடன் மழையும் பொழியும்.
- தர்மம் செய்தல் சித்தப் பிரமை நீங்குவதுடன், ஏழைகளின் பசியும் நீங்கும்.
- யாகம் நடத்துதல் பாவங்கள் விலகுவதுடன் ஒற்றுமை பெருகும்.
- பசு பராமரிப்பினால் நம் குழந்தைகள் நலமுடன் வாழ்வர்.
- முன்னோர் வழிபாடு சகல சவுபாக்கியம் கிடைப் பதுடன் வாழ்வில் நிம்மதி தரும்.

மேலும் கோவிலை சுத்தம் செய்வதால் கடவுள் அருள் கிட்டும் என்றும், மந்திரங்களை மனப்பாடம் செய்தால் செல்வம் கிட்டும் எனவும் பலவிதமான நற்செயல்களை ஆன்றோர்கள் நம் வாழ்வு உயர வகுத்து வைத்துள்ளனர். இவைகளில் நம்மால் முடிந்தவற்றை செய்து நாமும் வாழ்வில் உயர்வோம்.

தொகுப்பு: மூ.சக்திவேல்
போன்: 09787576858



# நொடியில் இன்னல் தீர்க்கும் காமாட்சி பக்தர்களை தலையில் தாங்கும் சிவன்





## காஞ்சி பெரியவரால் உலகிற்கு தெரியவந்த சிவாலயம்

காஞ்சிபுரம் திருப்புட்குழி வழியாக வேலூர் செல்லும் பெங்களூரு பிரதான சாலையில், காஞ்சிபுரத்தில் இருந்து 25 கிலோமீட்டர் தொலைவில், ஒச்சேரி என்ற கிராமத்திற்கு அடுத்து அமைந்துள்ள ஊர், சிறுகரும்பூர்.

இங்கே அமைந்துள்ளது, சுந்தர காமாக்ஷி அம்பிகை ஆலயம். கிட்டத்தட்ட 1500–2000 ஆண்டுகள் பழமை வாய்ந்த சிவாலயம்.

வ்யாக்ரபாதர் பூஜித்த ஸ்வயம்பு இலிங்கம் இத்தலத்தின் சிறப்பாகும், இங்குள்ள ஸ்வாமி. பார்த்தாலே நன்கு அறியலாம், கீழேபரந்தும், மேலே குறுகியும், பிடித்துவைத்தது போன்ற இலிங்க மூர்த்தி. கஜப்ருஷ்ட விமான அமைப்பின் கீழே அற்புதமாக குடிகொண்டுள்ளார்.

இக்கோயிலின் தல மரம் சரக்கொன்றை பரமேஸ்வரருக்கு பரம இஷ்டமான மரம்.

இத்தலத்து அம்பிகை தன்னுள் பாதியாக சிவபெருமான் உள்ளதை அறிவிக்க, ஒரு காதில் மகரக் குழையும், மறுகாதில் தோடும் அணிந்திருக்கிறாா்.

தொண்டர் தம் பெருமையைச் சொல்லவும் பெரிதே என்ற வாக்கிற்கிணங்க, இவ்வாலயத்தில் அறுபத்து மூவர் இல்லை. மாறாக அறுபத்து மூன்று நாயன்மார்களும், தக்ஷிணா மூர்த்தியுடைய ஜடாபாரத்தில் இலிங்கங்களாகக் காட்சி தருகிறார்கள்.

அதாவது, சிவனை வழிபட்டு சிவமாகவே ஆனதால் இலிங்கமாகவும், அடியார்களை இறை வன் தலை மீது வைத்து பிள்ளை போல் கொண்டாடுவார் என்பது போல், தனது தலையில் அடியார்களை சுமப்பது சிவபெருமான் அடியார்களுக்கு செய்யும் மரியாதைக்கு சான்றாகும்.

கோவிலில் ஓரிடத்தில் வில்வமும்வேம்பும் ஒன்றாய்வளர்ந்திருக்கின்றன. வேப்ப மரம் தனது கிளையை வில்வத்தின் மீதுபோட்டவாறு வளர்ந்திருக்கிறது.

இந்தக் காட்சியை பார்க்குபோது அம்பாள் சிவனுடைய தோள் மீதுகைபோட்டவாறு இருப்பதைப் போன்று இருக்கும். வில்வ மரம் மூன்று கிளைகள் விட்டு சூல வடிவில் வளர்ந்திருக்கிறது. அடியில் ஒரு பெரிய சிவலிங்கமும் அம்பாளும் உண்டு.

தவிர அழகு வாய்ந்த விநாயகர், சண்முகர், நவகிரஹங்கள் சந்நிதிகள் உண்டு.

ஸ்வாமியின் சந்நிதியில் முழுக்க கல் திருப்பணி. விமானம் தவிர. அதேபோல், எங்கும் காணக்கிடைக்காத வகையில், அம்பாளுக்கு முழுவதும் பச்சைக்கல் கொண்டு சந்நிதி அமைக்கப்பட்டுள்ளது.

பச்சைக்கல்லுடைய மகிமையால், அம்பாள் சந்நிதியில் உஷ்ணம் நிரம்புவதில்லை. எப்போதும் குளிர்ச்சியாக இருக்கிறது.

அந்நியர்களின் படையெடுப்புக்கு அஞ்சி, முற்காலத்தில் எல்லா விக்கிரஹங்களும் ஸ்வாமி சந்நிதியில்வைக்கப்பட்டும், பூமியில் புதைக்கப்பட்டும், மறைக்கப்பட்டன.கோவில் இருக்குமிடம் தெரியாமல், மண்மேடு அமைத்து கோவிலை மூடிவிட்டனர். காலப்போக்கில் இங்குகோவில் இருந்ததே தெரியாமல்போனது.

காஞ்சி பெரியவர்களின் உத்தரவுப்படி, தொ. மு.பாஸ்கரத்தொண்டைமான் அவர்கள், இங்கே அகழ்வுப்பணி மேற்கொண்டு, மண்மேட்டுக்குள் இருந்த சந்நிதியைகண்டுபிடித்தார்.

அருகே இருந்த அம்பாள் சந்நிதி வெற்றிடமாக இருந்ததால், சிறுவர்கள்விளையாட சென்றார்களாம், ஆனால் எப்போது போனாலும் ஒரு சர்ப்பம் சீறிக்கொண்டு அவர்களைவிரட்டியதாம். கோவில்கண்டுபிடிக்கப்பட்டதையும்,சர்ப்பத்தின் சீற்றத்தையும் குறித்து, காஞ்சிமஹாபெரியவாளிடம் தெரிவித்ததை அடுத்து, பெரியவாள் இங்கே விஜயம்செய்து, தரிசனம் செய்தார்களாம்.

அம்பாள் சந்நிதிக்கு வந்த அவர், விக்ரஹம் இல்லாத போதும் சாந்நித்தியம் இருப்பதால் தான் சர்ப்பம் யாரையும் நுழையவிடாமல் தடுப்பதாக அறிந்தார். அதே போல், அங்கே ஒரு அழகிய சிவலிங்க ஆவுடையாரின் மீது, கல்லிலேயே அம்பாளுடைய ஸ்ரீசக்ரயந்த்ரம் இருந்தது. இதைக்கண்டபெரியவாள், அங்கிருந்த நெருஞ்சி முட்களின் ஊடே, தர்ப்பை பாயை விரித்து, அமர்ந்துவிட்டார். ஒருசில நாட்களுக்கு அங்கிருந்து விலகவில்லை. பின்பு, உடனே திருப்பணி துவங்க அனுக்கிரஹம் தந்தார். காஞ்சியை சேர்ந்த சுப்பையா ஸ்தபதி இதைமேற்கொண்டு செய்தார்.

திருப்பணி நிறைவடையும் நேரம், தரைத்தளம் போட தரையைத் தோண்டியபொழுது, மேலும் ஒரு அம்பாள் சிலையும், அம்பாள் சந்நிதி விமானத்திற்கும் சுவருக்கும் இடையே வர வேண்டிய மேல் வரிசை சிற்பக்கற்களும் கிடைத்தன. கர்ப்பத்தில் இருக்கும் சிசு, தாயும் தந்தையும் சிசுவோடு இருத்தல் என பலவித சிற்பங்களை கொண்ட அக்கற்களை இன்றும் பிரகாரத்தில் காணலாம். விமானம் எழுப்பப்பட்ட காரணத்





தால் அவற்றை மேல்வரிசையில் வைக்க இயலவில்லை.

புதிதாக கிடைத்த அம்பாள் திரிபுரசுந்தரி என்றும், அவள் தான் த்ரிபுராந்தகேஸ்வரஸ்வாமியின் போகசக்தி அம்பாளென்றும், சுந்தர காமாக்ஷி, தானே சிவசக்தி ஐக்கியமான ராஜராஜேஸ்வரி அம்சமென்றும் பெரியவாளால் தெரிவிக்கப்பட்டு, அவ்வாறே சுவாமி சந்நிதிக்குள்ளேயே தெற்கு நோக்கி ஸ்ரீதிரிபுரசுந்தரி அம்பாளும், தனி பச்சைக்கல் சந்நிதியில் கிழக்குநோக்கி ஸ்ரீ சக்ர பீடத்தோடு சுந்தரகாமாக்ஷி அம்பாளும் அருள்கின்றனர்.





அம்பாள் ஐக்கிய ரூபத்தில் ஸ்ரீசக்ரபீடத்தோடு இருக்கும் கோவில்களில் கண்டிப்பாக ஒரு காவல் தெய்வம் உண்டு. சாஸ்தா, பைரவர், வீரபத்ரர் என யாராவது இருப்பர்.

இங்கேயும், தக்ஷனுக்கு ஆட்டுத்தலை தந்து, அனுக்கிரஹம் செய்த கோலத்தில் அனுகிரஹ வீரபத்ரர் அம்பாளுக்கு எதிரே இருக்கிறார். அவர் சிரசில் சிவலிங்கம் தாங்கியவாறு காணப்படுகிறார்.

ஸ்வாமி சந்நிதியில் விலகி இருக்கும் நந்தியும், சுவற்றில் பாதி புலி உடல்கொண்ட ஆண், ஒருபுறம் தீபம்காட்டுவதாகவும், பாதி புலி உடல்கொண்ட பெண் மறுபுறம் தூபம் காட்டுவதாகவும் சிற்பங்கள் உள்ளன. இவர் சிவப்பரம்பொருளை வணங்கிய புலி உருவம் பெற்ற வ்யாக்ரபாதர் என்று கூறுகிறார்கள்.

சுந்தரகாமாக்ஷி அம்பாள் கைகளில் பாசாங்குசம், அபய வரதத்தோடு கூடிய பேருக் கேற்ற அழகு சொட்டும் திருமேனி.

முன்னே இலிங்கபீடத்தில் ஸ்ரீசக்ரம். அம்பாளுக்கு கால்களுக்கு இடையே த்வாரமும், அதன் மூலம் கொலுசுசார்த்தும் வழியும் உள்ளது.

அம்பாளுக்கு அபிஷேகத்தின்போது தலையில் ஜலம் விடும்போது, கண்களை மூடிக்கொள்வது போலவும், ஜலம் வடிந்தவுடன் மீண்டும் கண்களைத் திறந்துகொள்வது போலும் மிகவும் அற்புதமாக காட்சி தருகிறாள்.

அம்பாள் பராசக்தியாக, ஸ்ரீவித்யாமூர்த்தி ஆக இருப்பதால், வாசலில் சுவர்களிலும் தூண்களிலும், கணபதி, ஸ்கந்தர், இலட்சுமி, சரஸ்வதி, இரண்டு குதிரைகளோடு சாமரம் வீசும் அஷ்வவல்லி, இரண்டு யானைகளோடுசாமரம் வீசும் கஜவல்லி (அச்வாரூடை சம்பத்கரி என்றும் கொள்ளலாம்) ஆகியவர்கள் காட்சி தருகின்றனர்.

சுவர்களின் இடையே ஒரு மாடத்தில் வாழைப்பழம் உரித்துசாப்பிட்டுக்கொண்டு, அம்பாளை நோக்கியவாறு, அவள் உத்தரவுக்கு காத்திருக்கும் கோலத்தில், அமர்ந்திருக்கும் குழந்தை ஆஞ்சநேயர் விக்கிரகம் உள்ளது.

“இந்த அம்பாளுக்கேன் காமாட்சின்னு பேர்? காமாக்ஷி காஞ்சிலே உக்கார்ந்துண்டு தானே இருப்பா?” என்று பெரியவாளிடம் கேள்வி கேட்டுள்ளனர். இத்திருக் கோயிலை நிர்வாகித்த நிர்வாகிகள்.

“இப்போ, உன் அம்மா எங்கயோ உக்கார்ந்துண்டு இருக்கா, நீ போய் சாப்பாடோ, காபியோ கேக்கறே... என்ன பண்ணுவோ.. பொறுமையா இதோ வரேன்னு சொல்லிட்டு, எழுந்துவந்துபோட்டுத்தருவா... ஆனா, இந்தகாமாக்ஷி பாவம், எதையாது கேட்டுண்டு வர்றகொழந் தேளுக்கு, உடனே கொடுத்துடணும்னு ஆசையாம். அதாவது, உக்கார்ந்துண்டு இருக்கறவ எழுந்துவர்ற கொஞ்ச காலதாமதம் கூட அவளுக்கு பண்ண விருப்பம் இல்லையாம். அதான் நின்னுண்டு இருக்கா” என்று மிகவும் அழகாக கூறியுள்ளார்.

நின்ற கோலத்தில் அருள் புரியும் காமாட்சி இத்தலத்தின் பக்தர்களுக்கு நொடிப்பொழுதில் இன்னல்களை தீர்த்துவைப்பாள் என்று காஞ்சி பெரியவரால் கூறிய கூற்றிற்கு ஏற்ப இத்தலத்து அன்னை செயல் புரிந்து வருகிறாள்.

இத்தலத்தினைப் பற்றிய மேலும் விபரங்களை தெரிந்து கொள்ள தொலைபேசி எண். 09791505077, 09486060120.

– தொகுப்பு ச.நாகராஜன்,
ஆசிரியர் ஆன்மிகமலர்.காம்.
தொடர்பு எண்: 08825844033





வளர்ந்து வரும் டிஜிட்டல் யுகத்தில்
இந்து சமயக் கருத்துக்களையும்,
பழமையான ஆன்மீக புத்தகங்களையும்

ஆன்மிகமலர் டிரஸ்ட்

Tamilnadu Government Redg.304/2016

முழு முயற்சியுடன் டிஜிட்டல் மயமாக்கி வருகிறது.
அழகிய வண்ணங்களுடன்,
கண்ணைக்கவரும் விதத்தில்
புத்தம் புதிய பொலிவுடன்,
அனைத்துவித டிஜிட்டல் கருவிகளின் மூலமும்
சிறுவர் முதல் வயதானவர் வரை அனைவரும்
தெளிவாக படிக்கும்விதத்தில் தயாரித்து வருகிறோம்.

எங்களின் சேவைக்கு உங்கள் உதவி அவசியம்
உங்களால் முடிந்த உதவிகளை செய்யலாம்.

AANMEEGA MALAR TRUST
ACCOUNT NO. 310601011001269
IFSC CODE:VIJB0003106
MICR CODE: 600029043
VIJAYA BANK (KODAMBAKKAM BRANCH)

நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024.
மேலும் தொடர்பு கொள்ளவும்
8825844033

# விதவிதமாய் அருள்புரியும் நந்தி

**சிவாலயத்திற்குள் நுழைந்ததும் நந்தியெம்பெருமானை வேண்டிக் கொண்ட பின்னர் தான் சிவபெருமானை வழிபட வேண்டும் என்பது விதியாகும்.**



சிவாலயத்திற்குள் நுழைந்ததும் விநாயகப் பெருமானை வழிபட்டு, கொடிமரத்திற்கு வணக்கம் செலுத்திவிட்டு, நந்தியெம்பெருமானை வேண்டிக் கொண்ட பின்னர் தான் சிவபெருமானை வழிபட வேண்டும் என்பது விதியாகும். கொடிமரத்திற்கும், நந்திக்கும் இடையில் நந்தியின் பின்புறம் இருந்து இறைவனை நோக்கி வழிபடவேண்டும். இந்த நந்தியை அதிகார நந்தி என்பார்கள். இவர் பூவுலகில் கடுமையாக தவம் செய்து பதினாறு வரங்களைப் பெற்றவர்; சிவகணங் களின் தலைவர்.

நந்தியானவர் சிலதிருத்தலங் களில் கரு வறைக்கு நேராக இல்லாமல், சற்றே விலகியபடி காட்சியளிப்பார். அப்படிப்பட்ட தலங்கள் திருப்புன்கூர், திருப்பூந் துருத்தி ஆகிய வையாகும். இவற்றில் இருந்தும் கொஞ்சம் வித்தியாசமாக காணப்படுகிறார், வடஆற்காடு மாவட்டம் திருவல்லம் வில்வநாதேஸ்வரர் கோவில் உள்ள நந்தி. இவர் இறைவனுக்கு புறமுதுகு காட்டியபடி, நின்ற நிலையில் காணப்படுகிறார். இதற்கு ஒரு காரணமும் கூறப்படுகிறது.

ஒருமுறை கோவில் அர்ச் சகர், சுவாமிக்கு அபிஷேகத் தீர்த்தம் எடுத்து வந்தபோது அவரை கஞ்சன் என்ற அரக்கன் வழி மறித்து துன்புறுத்தினான். அர்ச்சகர், இறை வனிடம் முறையிட, இறைவனோ நந்திக்கு கண்ணசைவில் உத்தர விட்டார். நந்தி உடனடியாக அசுரனை அடித்து துரத்தினார். மீண்டும் அசுரன் வருகிறானா? என்பதைப் பார்ப்பதற்காகவே நந்தி கோவிலின் வாசலை நோக்கிய வண்ணம், இறைவனுக்கு புறமுதுகு காட்டி நிற்பதாக கூறுகிறார்கள்.

இதே போல் வித்தியாசமான தோற்றத்தில் காட்சி தரும் நந்தீஸ்வரர் அருள்புரியும் சிவன் கோவில்கள் மிகவும் போற்றப்படுகின்றன. சிவராத்திரியின் போதும் பிரதோஷ காலத்தின் போதும் இறைவனுடன் அங்கு அருள்பாலிக்கும் நந்தீஸ்வரரையும் வழிபட்டால் வாழ்வில் வசந்தம் வீசும் என்பர்.

## விஷ்ணு நந்தி

சிவாலயங்களில் கொடி மரத்திற்குப் பக்கத்தில் இருக்கும் அதிகார நந்தியை அடுத்த படியாக ஒரு நந்தி காட்சி தரும். அது 'மால்விடை' எனப்படும் விஷ்ணு நந்தி. திரிபுர சம்ஹார காலத்தில், திருமாலே நந்தியாக வடிவம் எடுத்து சிவபெருமானைத் தாங்கியதாக புராணங்கள் தெரிவிக்கின்றன. கொடிமரம் இல்லாத கோவில்களில் சிவனை நோக்கி ஒரு நந்தி காட்சி தருவார். இவரை 'பிராகார நந்தி' என்பார்கள்.

## தரும நந்தி

சிவபெருமானுக்கு அருகில் நெருக்கமாக இருக்கும் நந்தி, 'தரும நந்தி' எனப்படுவார். இந்த நந்தியின் மூச்சுக்காற்று சுவாமியின் மீது பட்டுக் கொண்டேயிருக்கும். அதனால் நந்திக்கும் சுவாமிக்கும் இடையே செல்லக்கூடாது என்று சாஸ்திரம் சொல்லும்.

பழமையான சிவாலயங்களில் அதிகபட்சம் ஒன்பது நந்திகள் இருக்கும். அவை பத்ம நந்தி, நாக நந்தி, விநாயக நந்தி, மகா நந்தி, சோம நந்தி, சூரிய நந்தி, கருட நந்தி, விஷ்ணு நந்தி, சிவ நந்தி என்பனவாகும். இந்த ஒன்பது நந்திகளையும் நந்தியால், ஸ்ரீசைலம் ஆகிய திருத்தலங்களில் தரிசிக்கலாம்.

## வாசலை நோக்கியபடி..

கும்பகோணம் அருகில் உள்ளது திருவைகாவூர் வில்வவனேஸ்வரர் கோவில். இங்குள்ள நந்தியம்பெருமான், கோவில் வாசலை நோக்கியபடி காட்சி தருகிறார். ஒரு முறை வேடன் ஒருவன் ஆலயத்திற்குள் வந்து இறைவனை வழிபட்டுக் கொண்டிருந்தான். அப்போது அவனது உயிரைப் பறிப்பதற்காக எமதர்மன் ஆலயத்திற்குள் வந்தார். அவரை நந்தியும், துவார பாலகர்களும் தடுக்க எமுதர்மன் திரும்பிச் சென்றார். மீண்டும் எமன் கோவிலுக்கு வராமல் தடுக்கவே நந்தியம்பெருமான் வாசலை நோக்கி பார்த்தபடி இருப்பதாக கோவில் வரலாறு கூறுகிறது.

## வெள்ளநீரை உறிஞ்சினார்

விருத்தாசலத்திற்கு மேற்கே 15 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது பெண்ணாடகம். இங்குள்ள ஆலயத்தில் கொழுந்தீசர் வீற்றிருந்து அருள்பாலிக்கிறார். ஒரு முறை பெண்ணாடகத்தில் கடும் மழை தொடர்ந்து பெய்து ஊரைச் சுற்றி வெள்ளம் சூழ்ந்தது. அந்த ஊர் மக்கள் இறைவனை வேண்டவே, இறைவன் நந்தியிடம் வெள்ளத்தை உறிஞ்சி மக்களைக் காப்பாற்றும் படி ஆணையிட்டார். உடனே நந்தியம் பெருமான் கிழக்குப் பக்கமாக வாசலை நோக்கி திரும்பி, வெள்ள நீரைக் குடித்து மக் களைக் காப்பாற்றினார். அன்றிலிருந்து ஆலய வாசலை நோக்கியபடியே உள்ளார்.

# சீரான வளர்ச்சிக்கான நடைமுறை வழிகள்

33 பாகம்

பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்

மனித வாழ்வு மேம்படுவதற்காக

மனிதனாக பிறவியெடுத்த ஒருவர் தமது வாழ்க்கையை எவ்வாறு பயன்படுத்தி கழிக்க வேண்டும் என்பது பற்றி குருதேவர் கூறியுள்ள உன்னதமான வழிமுறைகளை கடைபிடிப்போமாக!

குருதேவர் ஸ்ரீஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தர் அருளுகிறார்: ”கீழே குறிப்பிட்டுள்ளவை உடல், மனம் மற்றும் ஆன்மாவைச் சீராக வளர்ப்பதற்கான சில நடைமுறை வழிகள் ஆகும்:

1. உங்கள் தினசரி திட்ட உணவில் பால் மற்றும் பால் சார்ந்த உணவுபொருட்கள், கணிசமான அளவு பச்சையான உணவு வகைகள், புத்தம் புதிய பழங்கள் ஆகியவற்றைச் சேர்த்துக்கொள்ளுங்கள், நுண்மையாக அரைக்கப்பட்ட கொட்டைவகை பருப்புகள் கலக்கப்பட்ட ஒரு பெரிய குவளை ஆரஞ்சுப் பழரசத்தைக் குடியுங்கள். மாமிசம் குறைவாக உட்கொள்ளுங்கள். மாட்டிறைச்சியையும், பன்றி இறைச்சியையும் அறவே தவிர்த்துவிடுங்கள். உணவு விதிமுறையைப் பற்றிய நம்பத்தகுந்த ஒரு நவீன புத்தகத்தைப் படித்து அதனைப் பின்பற்றுங்கள்.

2. வாரத்தில் ஒருநாள் ஆரஞ்சுப் பழரசத்தை அருந்தி உபவாசம் இருங்கள். உங்கள் வைத்தியர் பரிந்துரைக்கும் தகுந்த இயற்கை மலமிளக்கியை உபயோகப் படுத்துங்கள்.

3. ஒவ்வொரு காலையிலும், மாலையிலும் ஆழ்ந்த கவனத்துடன் சுறுசுறுப்பாக நடப்பதையோ ஓடுவதையோ அல்லது வேறு எந்தவிதமான தேகப்பயிற்சியையோ உங்கள் தேக அமைப்பு அனுமதிக்கும் சக்திக் கேற்றவாறு உங்களுக்கு வியர்க்கும்வரை செய்யுங்கள்.

4. பைபிள் மற்றும் பகவத் கீதையிலிருந்து, (கிறிஸ்துவ மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந் தால் பைபிளும், இந்து மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தால் பகவத்கீதையும்) ஏதாவது எழுச்சியூட்டும் பத்தியை படித்து அதன்மீது தியானம் செய்யுங்கள்.

5. ஷேக்ஸ்பியர் மற்றும் இதர இலக்கியங்கள் மற்றும் வேதியியல், இயற்பியல் மற்றும் உடற்கூறு இயல், கிழக்கத்திய மற்றும் மேற்கத்திய தத்துவங்களின் சரித்திரம், மத ஒப்பீடு, நீதிநூல்கள், உளவியல் ஆகிய விஷயங்கள் மீதான நடைமுறை புத்தகங்களிலிருந்து பொருத்தமான பகுதிகள் ஆகியவற்றைப் படியுங்கள். தரம் குறைந்த நூல்களில் நேரத்தை வீணாக்காதீர்கள்.



ஆரோக்கியத்தைப்பற்றிய ஒரு நம்பத்தகுந்த சஞ்சிகை மற்றும் ஓர் எழுச்சியூட்டும் ஆன்மீக இதழ் இவைகளைப் படியுங்கள். செய்தித்தாட்களைப் படிக்கும்போது, வெறும் நகைச்சுவை துணுக்குகள், புரளிகள் மட்டுமல்லாது தலையங்கம், ஆரோக்கியம் பற்றிய கட்டுரைகள் ஆகியவற்றையும் சேர்த்துப் படியுங்கள்.

6. வெவ்வேறு கோயில்களுக்கும் தேவாலயங்களுக்கும் எல்லா மதங்கள் மீதான உங்கள் மதிப்பையும் புரிந்துகொள்ளும் தன்மையையும் பெருக்கச் செய்வதற்காக செல்லுங்கள். ஒவ்வொன்றையும் நம் இறைவனின் ஆலயமாக பாவியுங்கள்.

7. மனிதனால் உருவாக்கப்பட்ட கோவில்களில் மட்டும் இறைவனைப் போற்றுவதுடன் இல்லாமல், உள்ளார்ந்த மௌனக் கோவிலிலும் அவனை ஆராதிப்பதற்கும் அவனுடன் தொடர்புகொள்ளவும் பயிலுங்கள். காலையில் ஒரு மணிநேரமும் இரவில் ஒரு மணிநேரமும் (ஸெல்ஃப் ரியலைசேஷன் ஃபெலோஷிப்/ யோகதா சத்சங்க சொஸைடி ஆஃப் இந்தியா)வின் உயர்ந்த குருமார்களால் போதிக்கப்பட்ட விஞ்ஞான முறைகளைப் பின்பற்றி தியானப் பயிற்சி செய்யுங்கள். குருட்டுத்தனமான பரிசோதிக்கப்படாத நம்பிக்கை மற்றும் மதசாஸ்திரம் என்னும் காடுகளில்திசை திருப்பப்படாதீர்கள். இறைவனிடம் அழைத்துச் செல்லும் ஆத்மஅனுபூதியின் இந்த ஒரு நெடுஞ்சாலையில் முன்னேறுங்கள்.

8. புலன்களினால் அடிமைப் படுத்தப்படாதீர்கள். உங்களை உலக ஆசைகளுடன் பந்தப்படுத்துவதற்காக அவைகள் இல்லை. இறைவனைப் பிரதிபலிக்கச்செய்கின்ற நல்லவற்றை உணர்வதன் மூலம் உங்களுக்கு உதவி செய்யவே அவைகள் உள்ளன.

9. நாடகங்களையோ அல்லது திரைப் படங்களையோ அவைகளில் மிக உயர்ந்த தரமுள்ளவற்றை தேர்ந்தெடுத்து எப்போதாவது மட்டும் பாருங்கள்.

10. குடும்பத்திற்கும் நாட்டிற்கும் மற்றும் எல்லா தேசத்திற்கும் பொருந்தக்கூடிய இறைவனுடைய தெய்வீக நியதிகளுக்கு கீழ்படியுங்கள்.

11. உண்மையை கனிவோடும் புரிந்து கொள்ளும் தன்மையுடனும் பேசுங்கள், மேலும் எங்கு உண்மையை நோக்கினும் அதற்கு மரியாதை கொடுங்கள்.

12. உங்கள் வீட்டிற்கும் நாட்டிற்கும் நீங்கள் கொண்டுள்ள அன்பினை, எல்லா நாட்டு மக்களை நேசிப்பதையும், அவர்களுக்கு சேவை புரிவதையும் உள்ளடக்கும் அளவு விரிவுபடுத்துங்கள். எந்த இனம் அல்லது மதம் ஆயினும், எல்லா மக்களிடத்தும் இறைவனைப் பாருங்கள்.

13. ஆடம்பரப் பழக்கவழக்கங்களைத் தவிர்ப்பதன் மூலம் குறைவாகச் செலவழித்து அதிகம் பெற்றிருப்பவராக இருங்கள். உங்களது வருமானத்திலிருந்து எவ்வளவு முடியுமோ அவ்வளவு சேமியுங்கள். இதனால் அசலில் கைவைக்கவேண்டிய அவசியம் இல்லாமல் உங்களது சேமிப்புத்தொகையிலிருந்து வரும் வட்டியிலிருந்தே நீங்கள் ஓரளவு வாழமுடியும்.

14. வாழ்க்கை நான்கு காலங்களாகப் பிரிக்கப்பட்டிருப்பதாகப் பாருங்கள். ஒவ்வொரு காலப்பகுதியின்போதும், அப்பகுதி வாழ்க்கைக்குப் பொருத்தமான செயல்களின் திறமையை வளர்ப்பதில் முக்கிய கவனம் செலுத்தப்படவேண்டும். பழமைவாய்ந்த வேத லட்சியப்படி நான்கு ஆசிரமங்கள் என நான்கு பகுதிகளாகின்றன.

அவை பிரம்மச்சரியம், கிருஹஸ்தம், வானப்பிரஸ்தம் மற்றும் சன்னியாசம்(துறவு) என கீழ்க் கண்டவாறு உள்ளன.

1. 5 வயதிலிருந்து 25 வயது வரை. குழந்தை தீவிரமான ஒழுக்கப்பயிற்சி பெற்று ஆன்மீக லட்சியங்களையும் பழக்கவழக்கங்களையும்

மாதம் இரண்டு முறை
இலவசமாக வெளிவரும்
“ஆன்மிகமலர் மெயில் புத்தகம்”
aanmeegamalar.com
இணையதளத்தில்
இலவசமாக டவுன்லோடு
செய்தும் படிக்கலாம்

பதித்துக்கொள்ளவேண்டும். அவன் பெரியவனாக வளரும்போது, அவனுக்கு ஒரு பொதுக் கல்வி கிடைக்கவேண்டும்; படிப்பு மற்றும் கூர்ந்து கவனிக்கும் தன்மை மூலம் திறமையுடன் இருக்க கற்கவேண்டும்; தனக்கு பொருந்துகிறது என்று அவன் நினைக்கும் ஒரு பணியில் விசேஷப் பயிற்சியை நாடவேண்டும்.

2. 25 வயதிலிருந்து 40 வயது வரை. வயது வந்த மனிதன் என்றமுறையில் ஒருவன் குடும்பம் மற்றும் இந்த உலகத்திற்கு ஆற்றவேண்டிய இதர கடமைகளை ஆன்மீக நெறியிலிருந்து பிறழாமல் இருக்க முயன்றுகொண்டு, நிறைவேற்றவேண்டும்.
3. 40 வயதிலிருந்து 50 வயது வரை. இந்தக் காலக்கட்டத்தில் வயது முதிர்ந்தவர்கள் அதிக அமைதியாக எழுச்சியூட்டும் நூல்களை படித்துக்கொண்டும், கலைகள் மற்றும் விஞ்ஞானத்தில் நிகழும் வளர்ச்சியை உடனுக்குடன் தெரிந்துகொண்டும், அதிக நேரத்தை தியானத்தில் செலவழித்துக் கொண்டும் வாழவேண்டும்.
4. 50 வயதிற்குமேல். தனது வாழ்வின் இறுதிப் பகுதியை ஒருவன் பெரும்பாலான நேரத்தை ஆழ்ந்து தியானம் செய்துகொண்டும் இதன் மூலம் கிடைக்கப்பெற்ற ஞானம் மற்றும் ஆன்மீகத்தைக் கொண்டு மற்றவர்களுக்கு சமூக, ஆன்மீக சேவை செய்துகொண்டும் கழிக்கவேண்டும்”.

பூவுலகில் பிறப்பெடுத்து வந்த ஒரு மனிதன் தமது வாழ்க்கையை எவ்வாறு கழிக்கவேண்டும் என்றும் எவ்வாறான செயல்களைச் செய்ய வேண்டும் என்பது பற்றிய உன்னதமான அறிவுரைகளை அருளியுள்ளார் குருதேவர். அவர் கூறிய அறிவுரைகளைக் கடைபிடித்து வாழ்கின்றவர்களுக்கு எந்தத் துன்பங்களும் நேருவதற்கு வழியிரா. அதை மீறுபவர்கள் கொடுமையான பல துன்பங்களுக்கு ஆளாவர். இன்றைய உலகத்தில் நிகழ்ந்துகொண்டிருக்கின்ற கொடுமைகள் மற்றும் நோய்களுக்கெல்லாம் காரணாம் தமது வினைகளே ஆகும். பல குடும்பங்களில் பல கொடுமைகளை நிகழ்த்து கின்றனர். பசியாற்றுவதற்கென்று வைத்திருக்கும் உணவினை உண்ணவிடாமல் தடுக்கின்றனர் சிலர். அவ்வாறு செய்கின்றவர்களுக்கு வயது முதிர்வு காலத்தில் குடல் சம்பந்தப்பட்ட நோய்கள் மற்றும் உணவு இருந்தும் உண்ணமுடியாமலுள்ள சூழ்நிலைகள் ஏற்படுகின்றன. இது எனக்குத் தெரிந்த உண்மையே. ஒரு தீய கர்மாவைச் செய்யும்பொழுது எதிர்காலத்தில் தாம் அதன் (தாம் என்ன செய்ததோ அதே கர்மாவின்) விளைவை சந்திக்க உள்ள உண்மையை அறியாமலிருக்கிறார்கள். தமக்கு அந்த வினையின் விளைவு வரும்போது பொறுக்கமுடியாமல் தவிக்கும் நிலையை நினைக்கக்கூட முடியாது. அறிந்தோ அறியாமலோ தெரிந்தோ தெரியாமலோ செய்கின்ற கர்மாவுக்கு முடிவுகட்டுவதற்கு குருதான் வரவேண்டும். இறைவனும் குருதேவரும்தான் மனிதனின் வேதனைகளைத் தீர்க்கவேண்டும். அதற்கு இறைவனிடத்தில் சரணடைந்து செய்த தவறுகளை உணர்ந்து மன்னிக்கும் பொருட்டு கேட்டுக்கொள்ளவேண்டும். நிச்சயம் ஒருவர் தன்னுடைய தவறை உணரும்போது மன்னிப்பும் உண்டு. இது சாதாரண மனிதருக்கு ஏற்படுவதாகும்.

மீண்டும் மலரும்...

குருப்ரியா Cell No.9894595909

**அன்பு**

சாதாரண அன்பு என்பது வெறும் மிருகக் கவர்ச்சிதான்; இல்லையேல் அதில் ஏன் ஆண்பெண் வேறுபாடு இருக்கவேண்டும்? ஒருவன் ஓர் உருவத்தின் திருமுன்னர் மண்டியிட்டுத் தொழுதால், அது கொடுமையான உருவ வழிபாடாம்! மனைவி அல்லது கணவன் முன்னால் முழங்காலிட்டால் அது சிறந்தது, போற்றத்தக்கது, அதில் எவ்விதத் தவறும் இல்லையாம். இந்த சிறுசிறு ஆசைகளை நாம் கடந்தாக வேண்டும். முதலில் நம்மை நான் தயாராக்கி கொள்ள வேண்டும். நாம் வாழ்க்கையை எப்படி பார்க்கிறோமோ அதை பொறுத்தே அன்பைப் பற்றி நமது கருத்தும் அமையும்.

– சுவாமி விவேகானந்தர்



# பெண்கள் குங்குமம் வைப்பதன் பலன்கள்



1. சுமங்கலிப்பெண்களின் தலை வகிட்டின் நுனியை சீமந்த பிரதேசம் என்பார்கள். அம்பிகையின் வகிட்டில் உள்ள குங்குமம் பக்தர் களுக்கு சேமத்தைக் கொடுக்கும்.
2. சுமங்கலிப் பெண்களின் சீமந்த பிரதேசம் ஸ்ரீமகாலட்சுமியின் இருப்பிடம் சுமங்கலிகளின் சக்தி குங்குமத்தில் உள்ளது.
3. வீட்டிற்கு வரும் சுமங்கலிகளுக்கு குங்குமம் கொடுப்பது, தருபவர் பெறுபவர் இருவருக்கும் மாங்கல யத்தின் பலத்தைப் பெருக்கும்.
4. குங்குமம் ஆரோக்கியமான நினைவுகளை தோற்றுவிக்கும். குங்குமம் அணிந்த எவரையும் வசியம் செய்வது கடினம்.
5. பெண்கள் குங்குமத்தை தான் இட்டுக் கொண்ட பின்பு தான் மற்றவர்களுக்குக் கொடுக்க வேண்டும்.
6. அரக்கு நிற குங்குமம் சிவசக்தியை ஒரு சேரக் குறிப்பதாகும். திரு மணப்புடவை அரக்கு நிறத்தில் இருப்பது நல்லது.
7. தெய்வீகத்தன்மை, சுபதன்மை, மருத்துவத்தன்மை உள்ள குங்குமம் அணிவதால் முகம், உடல் மற்றும் மனம் ஆகியவைகளுக்கு அதிக நன்மைகள் உண்டாகும்.
8. திருமணமான பெண்கள் நெற்றி நடுவிலும் வகிட்டின் தொடக் கத்திலும் குங்குமம் அணிவது சிறப்பு.
9. ஆண்கள் இருபுருவங்களையும் இணைத்தாற் போல் குங்குமம் அணிவது தன்னம்பிக்கையை அதிகரிக்கும்.
10. கட்டைவிரலால் குங்குமம் இட்டுக் கொள்வது மிகுந்த துணிவைக் கொடுக்கும்.
11. குருவிரலால் (ஆள்காட்டி விரல்) குங்குமம் அணிவது முன்னனித்தன்மை, நிர்வாகம், ஆளுமை போன்றவற்றை ஊக்குவிக்கும்.
12. சனிவிரல் (நடுவிரல்) குங்குமம் இட்டுக் கொள்வது தீர்காயுளைக் கொடுக்கும். குங்குமம் அணிவது தெய்வீக தன்மை, உடல் குளிர்ச்சி மற்றும் சுயக் கட்டுபாட்டிற்கு நல்லது.

# பில்லி, சூன்ய பிரச்சனை போக்கும் திருமுல்லைவாயில் பச்சையம்மன்



இந்தியாவில் உள்ள அம்மன் சன்னதிகளும் அம்மன் வடிவங்களும் பல்வேறு வகைகளில் இருந்தாலும், ஒரு சில வடிவங்களில் காட்சி தரும் அம்மன் மிகவும் சக்தியும், அற்புத ஆற்றலும் படைத்து விளங்குவார்கள். அந்த வகையில் பச்சையம்மன் வழிபாடு என்பது மிகவும் பிரசித்தி பெற்றது மட்டுமல்லாமல், பச்சையம்மனை வணங்கினால், ஒரே நேரத்தில் பெருமாள், விநாயகர், பைரவர், மகாலட்சுமி (வேங்கடமலை நாச்சியார்), சரஸ்வதி (பூங்குறத்தி நாச்சியார்), இந்திராணி (ஆனைக் குறத்தி), மன்மதன் ரதி, வாழ்முனி, சுகரிஷி, கருடாழ்வார், செம்முனி, கருமுனி, முத்துமுனி, வேதமுனி, நாதமுனி, சடாமுனி, யோகினி போன்ற பல தெய்வங்களின் அருளும் ஒன்றுசேர கிடைக்கும்.

இதற்கு பல்வேறு சான்றுகளும், காரண காரியங்களும் உண்டு. பச்சையம்மன் சிவபெருமானை நோக்கி கடும் தவம் இருபதற்கு, மேற்கண்ட அனைவரும் பச்சையம்மனுடன் இருந்து உதவி புரிந்தனர். அம்மனின் தவம் நிறைவடையும்போது மேற்கண்ட அனைவரும் அம்மனுக்கு துணையாக இருந்ததால் பச்சையம்மன் கோயில் கொண்டுள்ள அனைத்து இடங்களிலும் இவர்களும் அம்மனுக்கு பாதுகாப்பாக இருப்பதாக கூறப்படுகிறது. இதனால் பச்சையம்மன் பக்தர்களுக்கும் இவர்கள் பாதுகாப்பு தருகின்றனர்.

இதன் காரணமாகத்தான் பேய், பிசாசு, பில்லி, சூன்யம், சாபம் போன்றவற்றால் அவதிப்படுபவர்கள் பச்சையம்மனை நாடி வழிபாடு செய்கின்றனர்.

## பச்சையம்மனின் வரலாறு:

சிவபெருமானின் தீவிர பக்தரான பிருங்கி முனிவர், சிவனைத் தவிர வேறெந்த தெய்வத்தையும் வணங்காதவர். அந்த அளவிற்கு சிவபெருமான் மீது கட்டுக்கடங்காத பக்தியை வைத்திருந்தார். ஒருசமயம் கயிலையில் சிவபெருமானை வணங்க வேண்டி பிருங்கி முனிவர் வந்த சமயம், சிவனுடன் பார்வதி தேவியும், தேவர்களுக்கும், முனிவர்களுக்கும் ஒன்று சேர இருந்தனர்.

சிவனை மட்டும் வணங்கும் கொள்கையுடைய பிருங்கி முனிவர் ஒரு வண்டாக உருவத்தை மாற்றி சிவனை மட்டும் வலம் வந்து, பார்வதி தேவியை வணங்காமல், சிவனைமட்டும் வணங்கிவிட்டு சென்றுவிட்டார்.

இதனால் பார்வதி தேவி மிகுந்த மன வேதனை அடைந்தார், உடனே சிவபெருமானிடம் தனது வேதனையை தெரிவிக்கும் வகையில் ‘‘ஐயனே! முற்றும் அறிந்த முனிவரே இப்படிச் செய்வது எந்த வகையில் நியாயம்? இனியும் இப்படி நிகழாமல் இருக்க தங்களின் உடலில் சரி பாதியை எனக்குத் தந்தருளுங்கள்’’, என்று ஈசனை வேண்டினார். அதற்குச் சிவபெருமான் உடனே செவிமடுக்கவில்லை.அன்னைக்கு ஒரு யோசனை தோன்றியது. கடும் தவம் இருந்தால், இவரிடம் வேண்டிய வரத்தினைப் பெறலாம் என்று முடிவு செய்து பூமியில் தவமிருக்க முடிவு செய்தார்.

காவி உடை, ருத்திராட்சம், சடை தரித்துப் பூலோகத்துக்கு வந்து தவம் செய்ய சரியான இடத்தைத் தேடினார். இமயம் தொடங்கி ராமேஸ்வரம், கன்னியாகுமரிவரை அனைத்துத் தலங்களிலும் நீராடி, சிவபிரான் குடிகொண்டுள்ள தலங்களில் சிவபூஜை செய்யக் கிளம்பினார். பார்வதியுடன் அவருடைய தோழிகளான 64 யோகினியர் துணையாக வந்தார்கள்.

## பச்சை நிறமாக மாறிய அன்னை:

பூமியில் தவம் புரியவும், லிங்கம் வடிக்கவும் தண்








ணீர் தேடினார் அன்னை பார்வதி தேவி. ஆனால் தண்ணீர் உடனடியாக கிடைக்கவில்லை. இதனால் தவித்துப் போன அன்னையின் உடல் கோபத்தால் சிவந்த மேனியாக மாறியது.

உடனே தன் புதல்வர்களான விநாயகரையும், முருகனையும் தண்ணீர் கொண்டுவரப் பணித்தாள். அதன்படி விநாயகர் சற்றுத் தொலைவில் உள்ள மலையில் முனிவர் தவமிருப்பதையும், அவர் அருகே கமண்டலத்தில் நீர் இருப்பதையும் அறிந்து, அதனைத் தன் வாகனமான மூஞ்சுறுவின் உதவியால் கவிழ்த்தார். கமண்டல நீர், கமண்டல நாக நதியாகி, அன்னை தவம் இருந்த இடத்தை நோக்கிப் பாய்ந்தது.

முருகப்பெருமான் தொலைவில் உள்ள மலை மீது தன் வேலைப் பாய்ச்சி நீர் வரச்செய்து ஆறாக்கியதால், அது சேயாறு ஆனது. இதற்குள் அன்னை தன் பிரம்பினை பூமியில் அடித்து நீர் வரச் செய்தாள். அது பிரம்பக நதி என்று பெயர் பெற்றது.

பிறகு தன்னுடைய பிள்ளைகளின் முயற்சியாலும், தன்னுடைய முயற்சியாலும் மூன்று நதிகள் தோன்றியதில், அன்னையின் உள்ளம் குளிர்ந்தது. இதையடுத்து சாந்தமாக தவம் இயற்றத் தொடங்கிய அன்னையின் மேனி பச்சை நிறமாக மாறியதாக கூறப்படுகிறது.



## ஏழு முனிவர்கள்

அன்னையின் தவப் பிரவேசம் ஒவ்வொரு ஊராக தொடர, உஜ்ஜைனி வரும்போது, அக்னி வீரன், ஆகாச வீரன் உட்பட மொத்தம் ஏழு சகோதரர்கள் பெண் பித்தர்களாகவும் அநீதர்களாகவும் கொடுமையானவர்களாகவும் ஆண்டு வந்தனர். அக்னி வீரன், அழகு மிகுந்த பெண்ணான உமா தேவியிடம் சென்று தான் அவரைக் கண்டு மோகிப்பதாகக் கூறினான். பார்வதி உடனே சிவனைத் துதிக்க, திருமால் பிரம்மா மற்றும் அஸ்வினி தேவர்கள் அவருக்குப் பக்கத் துணையாக வந்தனர்.

தன் சகோதரியிடம் தகாத வார்த்தை பேசிய அக்னி வீரனைக் கண்டு பெரிய அரக்க வடிவம் கொண்ட திருமால், வானளவு உயர்ந்து அவனைத் தன் காலடியில் அழுத்திச் செயலற்றவனாக்கினார். வானளவு உயர்ந்து நின்றதால் வான் முனி எனப்பட்டு காலப்போக்கில் வாழ்முனியாக மருவி அழைக்கப்பட்டார். உடன் வந்த ரிஷிகளும் திருமாலைப் போல் பேருரு கொண்டனர்.

இதன்பின், சாகாவரம் பெற்றிருந்த சகோதரர்கள் ஆகாய வீரன், ஜல வீரன் சண்ட வீரன், ரண வீரன், கோட்டை வீரன், அந்தர வீரன் ஆகியோரைச் செம்முனி, கருமுனி, முத்துமுனி, வேதமுனி, நாதமுனி, சடாமுனி ஆகியோர் அவர்களைச் செயல்படாதவாறு செய்தனர். அவர்களின் தலை மட்டும் தெரிய, முனிவர்கள் எழுவரும் பூமிக்குள் அழுத்திக்கொண்டு அமர்ந் தனர்.

அக்னி வீரனின் மகனான வீரமுத்து இதைக் கண்டு வெகுண்டெழுந்து போருக்கு வர, வாழ் முனியான திருமால் அவனது படைகளை அழித்தார். அவனை வதம் செய்யப் போகும்போது அவனுடைய மனைவி வீராட்சி விஷ்ணுவின் காலில் விழுந்து மடிப்பிச்சை கேட்க, வாழ்முனி அவனை விடுவித்தார்.

போர் முடிந்ததும் பெருமாளின் தங்கையான பச்சையம்மனின் தவத்திற்கு துணையாக இருக்க மகாலட்சுமி (வேங்கடமலை நாச்சியார்), சரஸ்வதி (பூங்குறத்தி நாச்சியார்), இந்திராணி (ஆனைக் குறத்தி ரதி) ஆகியோர் இருப்பார்கள் எனக் கூறிச் சென்றார் திருமால்.

சிவன் கட்டளைப்படி அவர்களோடு உமையாள் காசிமா நகர் சென்று அன்னபூரணியாகி அறம் செய்து யோக பூமியான காசியை விட்டு ஒவ்வொரு சிவத்தலமாக பூஜை செய்து மோக பூமியான காஞ்சி செல்லத் தொடங்கினார். அவ்வாறு அம்மன் வழிபட்ட திருத்தலங்கள் பல தமிழகத்தில் உள்ளது. ஒவ்வொரு தலத்திலும் ஒவ்வொரு நிகழ்வுகள் நிகழ்த்தப்பட்டதாகவும் புராணங்களில் கூறப்படுகிறது.

சென்னையைச் சுற்றி சுமார் 15 பச்சையம்மன் தலங்கள் உள்ளன. அதில் மிகவும் பழமையும், புராண தொடர்பும் மிகுந்தது சென்னை ஆவடி செல்லும் வழியில் திருமுல்லைவாயில் அமைந்துள்ள பச்சையம்மன் தலம். இத்தலத்தில் கங்கை சூரிய புஷ்கரணி என்னும் சக்தி தீர்த்தத்தை பச்சையம்மன் உருவாக்கினார். அந்தத் திருக்குளத்தின் கரையில் மக்களுக்கும் தேவர்களுக்கும் அல்லல் கொடுத்துவந்த ஹதாசுரனையும் அவனது படைத்துணை மகா பூதத்தையும் அழித்தார். அங்குக் கோயிலை அமைத்து சிவபூஜை செய்தார்.

மரகதவல்லியாக குடிகொண்டதால் இங்கு அவளை பச்சைமலை அம்மன் என அழைத்து வழிபடுகிறார்கள்.

இந்தக் கோயிலில் மன்மதன் ரதி, பெருமாள், முடியால் அழகி பூங்குறத்தி, விநாயகர், பைரவர் ஆகியோருடன் திருமால் பெரிய மீசையுடன் வாழ்முனியாக அமர்ந்திருக்கிறார். எதிரில் சுகரிஷியும் கருடாழ்வாரும் துணை நிற்கின்றனர். செம்முனி, கருமுனி, முத்துமுனி, வேதமுனி, நாதமுனி, சடாமுனி ஆகிய ஆறு முனிகளும் அமர்ந்து காவல் காக்கின்றனர். எதிரே அவர்களது குதிரை முதலிய வாகனங்கள் தயார் நிலையில் அணிவகுத்து நிற்கின்றன. எதிரில் கௌதம முனிவர் சிவலிங்க உருவோடு நின்ற கோலத்தில் அருள, அவருக்கு வலப்புறம் பச்சையம்மன் தவக்காலத்தில் வழிபட்ட மன்னாதீஸ்வரர், அகோர வீரபத்திரர் சன்னிதிகள் உள்ளன. இங்குள்ள வானொலி நிலைய வளாகத்தில் உள்ள அம்மனின் காலடி, பக்தர்களால் வணங் கப்படுகிறது. சுமார் 900 ஆண்டுகளுக்கு முன்பு வெள்ளானூர் சிற்றரசர் ஒருவர் நோய் வாய்ப்பட்டார்.

அவரின் நோய் குணமாக குறிகேட்டனர். அப்போது பூலோகத்தில், அம்பாளின் காலடிபட்ட இடமான திருமுல்லைவாயல் சென்று ஒருநாள் இரவு தங்கும்படி கூறி உள்ளனர். இதனையடுத்து, அவர் தான் தினமும் பூஜை செய்யும் அம்பாள் சிலையுடன் திருமுல்லைவாயலில் சென்று தங்கினார். மறுநாள் காலையில், தன் நோய் குணமானதை கண்டு அரசர் ஆச்சரியப்பட்டார். பின்னர் அங்கிருந்து புறப்பட்ட போது, அம்பாள் சிலையை எடுக்க முயன்றார். ஆனால், சிலையை அசைக்க கூட முடியவில்லை. இதனால் அம்பாள் அங்கேயே தங்கி, அருள் புரிய விரும்புவதாக கருதி, அங்கேயே அவருக்கு சிறிய கோயில் ஒன்றை எழுப்பினார்.

தற்போது, இந்து சமய அறநிலைய துறையின் கட்டுப்பாட்டில் உள்ள இக்கோயில், மிகவும் பிரசித்தி பெற்றதாக விளங்குகிறது. அம்பாள், பச்சையம்மனாகவும், இறைவன் மண்ணாதீஸ்வரராகவும் அருள் பாலிக்கின்றனர். இந்த கோயில் வளாகத்தில் வராகி, ஐயங்கிரீவர், காயத்திரி, காத்தாயி, துர்க்கை, உக்கிரவீரன், வீராட்சி, விஸ்வரூப மகாவிஷ்ணு, சப்த ரிஷிகள் உள்ளிட்ட சன்னதிகள் உள்ளன. இப்பகுதி மக்களுக்கு பச்சையம்மன் குல தெய்வமாக விளங்குகிறாள்.

திருமுல்லைவாயில் பச்சையம்மன் தலம் பற்றி மேலும் விபரங்களை தெரிந்து கொள்ள தொடர்பு கொள்ள தொலைபேசி எண்: 09840475813

– தொகுப்பு: நாகராஜன், 08825844033






ஆசிரியர், வெளியீட்டாளர்
C.நாகராஜன்
செல்: 8825844033
♦♦♦
இணை ஆசிரியர்
முருகன் செல்: 7338881773
♦♦♦
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர், சஞ்சனா, ஸ்ரீபதி,
குருபிரியா செல்: 9894595909
மூ.சக்திவேல் செல்: 9787576858
புனிதவேல் செல்: 9841807572
♦♦♦
வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
செல்: 08825844033

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
08825844033

ஆசிரியர் குழுவில் நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்ளுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
8825844033

# பொருளால் ஏற்படும் பயம் நீங்கினால் ஞானம் வரும்

பலகீனமாக மனிதன் சிந்தித்தால் குடும்ப வாழ்க்கையை மட்டும் அன்றாட தேவைகளை மட்டுமே சிந்திக்க முடியும். பலமாகச் சிந்தித்தால் தான் பக்தி மார்க்கம் அமையும்.

கல்லாயிருந்தாலும் புல்லா யிருந்தாலும் எதையும் மதிக்கத் தெரிந்தவன் தடுக்கி விழ மாட் டான். அதனால் கஷ்டம் வந்தபின் தான் கடவுளை எண்ண வேண்டும் என்று இருக்கக் கூடாது.

பிரச்சினைகளை நினைப்பதற்கு முன் கடவுளை நினைத்து விட்டால் பிரச்சினைகளே வந்திருக்காது.

கடவுளை மையமாக வைத்து சில்லரை வேலை செய்தால் கடவுளிடம் அகப்பட்டுக் கொள்வீர்கள். பக்தன் என்ற நிலையையும் அடைவீர்கள்.

கடவுளிடம் வரும்போதாவது ஆசையை விடுங்கள். மற்ற நேரங்களில் எவ்விதமாக வேனும் இருந்து கொள்ளுங்கள்.

பொருளால் ஏற்படும் பயம் நீங்கினால் ஞானம் வரும். நமக்கு நீங்காததால் பொரு ளை ஈட்டிக் கொண்டே போகிறோம். பயம் நீங்கிவிட்டால் எப்பொழுது வேண்டுமானாலும் சம்பதிக்கலாம்.

பெருந்தன்மை ஆற்றலை புரிந்து கொள் வது ஞானம். அது எங்கெல்லாம் இருக்கிறது என்று தெரிந்து கொள்வது பேராற்றல் பிரும்ம ஞானம்.

பெரிய விஷயங்களையெல்லாம் தெரிந்து கொண்டுவிட்டால் காரணமானவன் சிறியவ னாகி உன்னிடம் அடங்கி விடுகி றான். ருசி இருந்தால்தான் அவனைத் தேடிப் போவீர்கள்.

நாம் செய்யும் செயல்களினால் அடுத்த வர்களுக்கு எந்த வருத்த மும் துன்பமும் வரக்கூடாது. இதுவே கர்வமாகும். செயல் வீரர் களின் தன்மை இதுவே.

பசியை உணர்ந்தவன் உண்டு. உண வைப் பார்த்து திருப்தி அடைந்தவன் கிடை யாது.

பொருளாதார துன்பம் உட லையே பாதிக்கிறது. சம்பாதித்தால் அது தீர்ந்து விடும். துயரம் மனதைப் பொறுத்தது. பக்தி செய்து இறைவனை வழிபட்டால் ஒழிய அது தீராது. கண்ணுக்கு காதுக்கு உபதேசம் தந்து உன்னை உ ய ர் த் து ப வ னே குருநாதன்.



## சீடனும் ஞானிகளும்

சீடன்: பாபம் என்றால் என்ன?

ஞானி: உலகத்திலுள்ள நலிவுகளால் ஜீவராசிகள் பாதிக்கப் படுமானால் அதுவே பாபம்.

சீடன்: துணை என்றால் என்ன?

ஞானி: எப்பொழுதும் அருகாமையில் இருக்கும் இறைவன்.

சீடன்: இறைவனின் கோலங்கள் என்றால் என்ன?

ஞானி: கடவுளின் அழகோடு கூடிய உருவங்கள்.

சீடன்: ஆத்ம பலத்தைப் பெற என்ன செய்ய வேண்டும்?

ஞானி: எது நம்மிடம் சமநிலையாக இருக்கிறது என்பதை உணர வேண்டும்.

சீடன்: ஞானம் என்றால் கடவுள் ஞானம் தானா?

ஞானி: எண்ணெய் வித்து என்றால் அது எல்லா எண்ணையையும் குறிப்பது போல், ஞானம் என்றால் கடவுள், பௌதீகம், கணிதம், லௌகீகம் எல்லாவற்றையும் குறிக்கும்.

சீடன்: ஞானம் வந்ததும் வாழ்க்கை எப்படி மாறும்?

ஞானி: உலக விஷயத்தை எடுத்துக் கொண்டாலே அத்தியாவசியமான நியாயம் எது, அநாவசியமான நியாயங்கள் சில சமயம் அத்தியாவசியமான கருத்துக்களாகக் கூட இருக்கும், ஞானம் உள்ளவன் இந்த நிலைகளிலெல்லாம் தெளிவாக இருப்பான்.

சீடன்: எது தர்மம்?

ஞானி: அத்தியாவசியமான தேவைகளைப் பூர்த்தி செய்வது அனைத் தும் தர்மம். இது எல்லோருக்கும் பொருந்துவதாலும் தர்மம்.

சீடன்: தர்மவான் யார்?

ஞானி: தர்மத்தை உணர்ந்தவன். அனைவருக்கும் தர்மம் வேண்டும் என்று எண்ணுபவன். செயலில் இறங்கம் போது தர்மவான்.

சீடன்: நிறைவு என்றால் என்ன?

ஞானி: நம்மை நாம் முடிவு செய்து கொண்டால் கிடைக்கும் உணர்வு.

– ஞானச்சேரி ஞானிகள் –

பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின் அருளுரையிலிருந்து தொகுத்தது

மேலும் விபரங்களுக்கு எஸ்.மகாதேவன், போன் 098410 28028

# "ஆ(ம)ஹா பாரதம்"

பாகம் 17

கருடன் தன் தந்தை வணங்கி நின்றார். கச்யபர் "மகனே! நீங்கள் அனைவரும் நலம் தானே" எனக் கேட்டு விட்டு "இந்த மனித கூட்டத்தின் மத்தியில் உனக்கு உரிய உணவு கிடைக்கிறதா" என்று கேட்டார்.

பெற்றோர் என்றாலே, அது எந்த உயிர் வாழ் இனமாக இருந்தாலும் முதலில் கேட்கும் கேள்வி சாப்பிட்டாயா என்பதுதான். இந்த உடல் அன்னமய கோசம் என்பது சரிதானே.

தந்தையின் கேள்விக்கு "தந்தையே! அன்னையின் அடிமைத்தனத்தைப் போக்க அமுதம் கொண்டு வரச் செல்கிறேன். கொண்டும் வந்து விடுவேன். ஆனாலும் உணவு எனக்குப் போதவில்லை. தாயின் அறிவுரைப்படி ஆயிரமாயிரம் நிஷாதர்களை உண்டப் பின்னும் பசி அடங்கவில்லை. என் பசித் தீர ஏதேனும் வழி இருந்தால் தயவு செய்து கூறுங்கள்" என்றார் கருடன் .

"மகனே ! நான் ஒரு கதை சொல்கிறேன் கேள்" என்று கதையைக் கூறத் துவங்கினார்.

உணவிற்கு வழி கேட்டால் கதையா? எனத் தோன்றும். தொடர்ந்துச் சென்றால் தான் நமக்கும் உண்மை விளங்கும்.

ஒரு காலத்தில் விபாவசு என்ற முனிவர் மிகவும் கோபம் உடையவராக இருந்தார். அவருடைய தம்பி சுப்ரதீகன் என்பவன். இவன் தமது சொத்துக்களை ஒன்றாக வைத்திருக்க விரும்பாமல் தன்னுடைய சொத்தினை பிரித்துக் கொடுக்கும் படி வற்புறுத்திக் கொண்டே வந்தான்.

விபாவசு சுப்ரதீகனுக்கு புரியவைக்க எண்ணி அவனிடம் "செல்வத்தின் மீதுள்ள மோகத்தின் காரணமாக மக்கள் அதனைப் பிரித்தெடுத்து தனியே செல்வதைத்தான் விரும்புகின்றனர். பிரித்தப் பின்னர் ஒருவருக்கொருவர் அந்த செல்வத்திடம் மயங்கி பரஸ்பரம் கோபம் அடைந்தே வாழ விரும்புகின்றனர். தன் செல்வத்தோடு தனியே வாழச்சென்றதும் அதுவரை இவனிடம் பகைக் கொண்டிருந்த பகைவன் அவனோடு நட்பு கொண்டு நண்பனாகி அவனோடு சேர்ந்து உறவினர்க்குள் பேதத்தை உண்டாக்குகின்றனர்.

மற்றவர்களும் இவர்களின் விரோதத்தை அறிந்து, சமயம் பார்த்து உள்ளே நுழைந்து, இவர்களின் பகையை மேலும் வலுப்படுத்தி இவர்களை தனித்தனியாகவே செய்து விடுவார்கள். இப்படி செய்பவர்கள் நீடித்து வாழாமல் விரைவிலேயே அழிந்து விடுகிறார்கள். எனவே ஸாதுக்கள் பிரிதலையோ, பங்கீட்டை புகழ்வதில்லை.

இப்படி பிரிந்து விடும் சகோதரன் சாஸ்திரத்தின் ஆணையை மீறி நடப்பதால் ஆனந்தம் பெறுவதில்லை. ஒருவரை ஒருவர் சந்தேகப்பார்வையால் தனது சந்தோஷத்தை இழந்து விடுகிறார்கள். எனவே நான் சொல்வதைக் கேள். இப்போது நீ கொண்டிருக்கும் இந்த எண்ணத்தை விட்டு விடு" என்றார்.

அந்தக் காலத்திலேயே துவங்கி விட்டது பாகப் பிரிவினை. அதிலும் அண்ணன் சொல்வதை சற்றே உண்ணித்துப் பார்த்தால் இன்றைய நிலைபாடுகள் நம் கண் முன்னே பளீரென வந்து நிற்கும். இது போன்ற அண்ணன்கள் இருந்து குடும்ப ஒற்றுமையைப் பேணிக் காத்துக் கொண்டு தான் வருகின்றனர். சுப்ரதீகன் போன்று வெகு பலர் செல்வ மோகத்தால் பேதப்பட்டு பகைவரால் படுகுழியில் தள்ளப்பட்டும் வருகின்றனர்.



அண்ணன் எவ்வளவு சொல்லியும் கேளாமல் மதங்கொண்டவனாய் இருந்த சுப்ரதீகனைப் பார்த்து "நீ யானையாகப்போகக் கடவது" என்று சபித்து விட்டார் விபாவசு. கோபம் கொண்ட சுப்ரதீகனும் அவரை "நீரினுள் வாழும் ஆமையாக நீ போகக்கடவது" என்று பதில் சாபம் விட்டார்.

இந்த இருவரும் யானையாகவும், ஆமையாகவும்பிறந்து மிகப்புண்ணியம் வாய்ந்த ஒரு தடாகத்தில் இப்போதும் ஒருவரையொருவர் சண்டையிட்டுக் கொண்டேயிருக்கிறார்கள். யானை நீர் அருந்த வந்தால் ஆமை நீரைக் கலக்கி விடுகிறது. நீரைக் கலக்கி விடும் ஆமையை யானை கரைக்கு இழுத்து வந்து விடுகிறது. இப்படித் தொடரும் இவர்களது பகைக்கு முற்றுப்புள்ளியாக நீ சென்று அவ்விருவரையும் உணவாகக் கொண்டு விடு" என்று கதையை முடித்தார் கச்யபர்.

சொத்துப் பிரச்சினை வந்து விட்டாலே அது ஒரு ஜென்மத்தோடு முடியாமல் பல பிறவி தொடர்ந்து வரும் என்பதையும் கதைக்கு நடுவே குறிப்பிட்டுக் கொள்ள வேண்டும். இதன் தொடர்ச்சிதான் நீதிமன்றங்களில் கூட ஒருவரின் ஆயுட்காலம் வரை பெரும்பாலான வழக்குகள் நடந்துக் கொண்டே இருக்கின்றன போலும்.

மகனே! தேவரோடு நீ போரிடும் போது உனக்கு மங்களம் உண்டாகட்டும். நிறைந்த கலசம், பிராமணன், பசு, போன்றவைகள் உனக்கு நன்மையைத் தரும். வேதங்களும், ஹவிஸ்ஸும், எல்லா ரகசியங்களும் உனக்கு பலமளிக்கட்டும்." என்று ஆசிக் கூறி அனுப்பினார் கச்யபர்.

கருடன் தந்தையின் ஆசியோடு அவர் சொன்ன அந்தத் தடாகத்தை அடைந்தார். கரைக்கும் நீருக்குமாக இழுபறியில் இருந்த இருவரும் கருடன் வந்ததைக் கண்டனர். அடுத்த நிமிடம் இருவரின் உடல்கள் கருடரின் இரு திருவடிக்குப் போய்ச் சேர்ந்தனர். இருவரையும் தன் கால்களால் பற்றிக் கொண்டு உண்பதற்குத் தகுந்த இடைத்தைக் தேடி அலைந்தார்..

இறுதியாக ஒரு ஆலமரத்தின் உச்சிக்கு வந்தார். அநேக கிளைகளுடன் கூடிய அந்த ஆலமரம் "பக்ஷி ராஜனே! பல யோஜனை தூரம் பரவியுள்ள என் கிளையில் அமர்ந்து சாப்பிடுங்கள்" என்றது.

உடனே கருட பகவானும் தன் பசியாற வேண்டி ஒரு கிளையில் உட்கார்ந்தார். அமர்ந்த அடுத்த கணம் அந்தக் கிளை உடைந்து விட்டது.

அடுத்த இதழில்....

- **Thali**, Ph:09786223577



# நாடுகடந்து அருள்புரியும் மலேசிய முருகன்

# பத்துமலை அழகன்

குன்று இருக்கும் இடமெல்லாம் குமரன் இருப்பான் என்று ஆன்றோர்கள் சொன்ன வாக்கு. சிவனின் மகனான முருகனுக்கும் தமிழர்களுக்கும் இருக்கக்கூடிய தொடர்பு என்பது வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்டதாகும். தமிழர்களின் பண்பாட்டோடும் மொழியோடும் தத்துவத்தோடும் பழக்க வழக்கங்களோடும் பின்னிப் பிணைந்திருந்த தன்மையைச் சங்ககால இலக்கியங்களான திருமுருகாற்றுப்படை , பரிபாடல் என்பன மிகச் சிறப்பாக விளக்கிக் கூறியுள்ளது.

இந்த ஆன்றோரின் வாக்கை நிருபிக்கும் வகையில் மலேசிய நகரில் எழுந்தருளியுள்ள பத்துமலை முருகன் உலக அளவில் பேசப்படும் மிகவும் அற்புதமான தலமாக விளங்குகிறது. இயற்கை கொஞ்சும் மலையும், சிறுசிறு விலங்கினங்களுடன் சேர்ந்தவாறு அமைந்த அற்புத தலம்தான் மலேசியாவில் அமைந்துள்ள பத்துமலை முருகன் கோயிலாகும்.

முருகவழிபாடு என்பது இயற்கையை ஒன்றிய வழிபாடாக இருந்து வருகிறது. இதை பரிபாடலில் மிக அழகாக கூறப்பட்டுள்ளது.

“மாக்கடலினின்றுநிவர்தெழுந்தஇளஞாயிற்றின் இயற்கை அழகில் உள்ளந் தோய்ந்த அன்பர்கள் அதனையே இறையென வழிபட்டு வணங்கினர். அதுவே பின்னர் நீலமயில் மீது வீற்றிருக்கும் செவ்வேள் வழிபாடாக மலர்ந்தது” என்று மிகவும் அற்புதமாக கூறப்பட்டுள்ளது.

முருகனை மலைக்கடவுளாகவும், தமிழ்க் கடவுளாகவும் வழிபடுகின்றனர் நமது முன்னோர். மலையின் இயற்கை அழகும், தமிழின் இனிமையும் கலந்ததால் முருகன் என்றும் அழகனாகவே காணப்படுகின்றான்.

மக்களின் வாழ்வு முதன்முதற் தொடங்கப்பட்ட இடம் மலை என்பது அறிஞர் கருத்து. ஆதிகால மனிதர் குன்று சார்ந்த குறிஞ்சிப் பகுதிகளில் வாழ்ந்த காலத்தில் முருகன் கடவுளாகப் படைக்கப்பட்டிருக்கலாம் என்பர். இதனையே “விண்பொரு நெடுவரை குறிஞ்சிக்கிழவ” என்று திருமுருகாற்றுப் படையில் நக்கீரர் குறிப்பிடுகின்றார்.

‘அமரர் இடர் தீர்த்தே அவக்கருளும் வெற்றிக் குமரனடி சிந்திப்பாய் சடர்ந்து’

என்கின்றது சைவநெறி. “என்னிருளைநீக்கும் இமையோக் கிடர்க்கடியும் பன்னிரு தோட் பாலன் பாதம்’’ என்கின்றது சங்கற்ப நிராகரணம். முருகனுக்கும் தமிழர்களுக்கும் இருந்த இறுக்கமான பிணைப்பினை முருகன், ‘கந்தன்’ என்றும் ‘வேலன்’ என்றும் ‘குகன்’ என் றும் அழைக்கப்படுவதில் இருந்து அறிந்து கொள்ள முடியும்.

பதினெட்டு மெய்கள். ஆறு முகங்களும் ஆறு இன எழுத்துக்கள். அவனது வேலே ஆயுத எழுத்து “முருகு” என்ற சொல்லில் ‘மு’ மெல்லினம் ‘ரு’ இடையினம் ‘கு’ வல்லினம் என்று சொல்கின்றனர் தமிழறிஞர்கள்.

தமிழகத்தில் முருகப்பெருமானுக்கு ஆறு படைவீடுகள் அமைந்துள்ளதைப் போல், மலேசிய நாட்டிற்கு மூன்று படைவீடுகள் புகழ்பெற்றவையாக விளங்குகின்றன. அவை பத்துமலை, தண்ணீர்மலை, கல்லு மலை ஆகும்.

முருகன் இருக்குமிடத்தை மட்டுமல்ல, முருகனின் பார்வைபடும் இடம் சிறப்படையும் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்குவது பழனி மலையாகும். பழனி முருகன் பார்க்கும் திசையில் கேரளா மாநிலம் அமைந்திருப்பதால் அந்த மாநிலம் செழிப்பாகவும், சிறப்பாகவும் இருப்பதாக கேரள மக்கள் நம்பிக்கை, இதனால், தைபூசம் போன்ற முருகனுக்கு சிறப்பு வாய்ந்த நாட்களில் கேரள மக்கள் இருமுடி கட்டி பழனிமலைக்கு வந்து செல்கின்றனர்.

முருகனின் பார்வைக்கே இவ்வளவு சக்தி என்றால், முருகனின் பிரம்மாண்ட கோவில் அமைந்துள்ள மலேசியாவிற்கு எண்ணற்ற புகழ் கிடைப்பதில் அதிசயம் ஒன்றுமில்லை...

முருகன் ஆலயங்களில் புகழ்பெற்றதாகவும், உலக அளவில் பிரசித்தி பெற்ற முருகன் ஆலயமாகவும் பத்துமலை முருகன் ஆலயம் திகழ்வதில் வியப்பொன்றும் இல்லை. இந்தக் கோயில் மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் இருந்து 13 கி.மீ வடக்கே, கோம்பாக் மாவட்டத்தில் உள்ளது.

1860–ஆண்டுகளில் பத்துமலைப் பகுதிகளில் வாழ்ந்த சீனர்கள் காய்கறி பயிரிட்டு வந்தனர். அவர்களுடைய விவசாயத்திற்கு உரம் தேவைப்










பட்டது. ஆகவே, அவர்கள் பத்துமலைக் குகைகளிலிருந்து வெளவால் சாணத்தைத் தோண்டி எடுத்துப் பயன்படுத்தி வந்துள்ளனர். அதற்கு முன்னர் இந்தக் குகைகளில் தெமுவான் எனும் மலேசியப் பழங்குடியினர் வாழ்ந்து வந்தனர் என்று வரலாற்றுச் சான்றுகள் கூறுகின்றன. இவர்களும் பத்துமலையைத் தங்களின் புனிதத் தலமாகப் பயன்படுத்தி வந்துள்ளனர்.

1878-இல் பத்துமலைப் பகுதிகளில் இருந்த சுண்ணாம்புக் குன்றுகளை ஆய்வு செய்த அமெரிக்க தாவரவியலாளர் வில்லியம் ஹோர்னடே என்பவர் பத்துமலையைப் பற்றி வெளியுலகத்திற்கு அறிவித்தார். பத்துமலையின் பெயர் புகழடைந்தது. அதன் பின்னர் 14 ஆண்டுகள் கழித்து 1891இல் தம்புசாமிப் பிள்ளை அங்கு ஒரு கோயிலைக் கட்டினார். பத்துமலைக் கோயிலின் நுழைவாயில் ஒரு வேல் வடிவத்தில் இருந்தது அவரைப் பெரிதும் கவர்ந்தது.

1890-இல் தம்புசாமிப் பிள்ளை கோலாலம்பூரில் ஸ்ரீ மகா மாரியம்மன் கோயிலைத் தோற்றுவித்தார். 1891-இல் பத்துமலையின் குகைக்கோயிலில் ஸ்ரீ சுப்ரமணியர் சிலையை நிலைநாட்டினார்.1892இல் இருந்து பத்துமலையில் தைப்பூசம் கொண்டாடப் பட்டு வருகிறது. 1920-இல் குகைக் கோயிலுக்குச் செல்ல மரக் கட்டைகளிலான 272 படிக்கட்டுகள் கட்டப்பட்டன. குகைக் கோயில் 100 மீட்டர் உயரத்தில் இருக்கிறது.

ஒரு காலத்தில் ஓர் ஒற்றையடிப் பாதையில் சென்று மலையின் உச்சியில் இருக்கும் முருகப் பெருமானை வழிபட்டு வந்த காலம் மாறி இன்று உலக அளவில் புகழ்பெற்று விளங்குகிறது பத்துமலை திருத்தலம்.

இம்மலை சுண்ணாம்புக் கற்களால் ஊசிப் பாறைகள் கொண்டு உருவான இயற்கை குகையாகும். இந்த மலையின் வயது நாற்பதுகோடி ஆண்டுகள் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். பத்துமலை அருகே ஓடும் கங்கை பத்து என்ற ஆற்றின் பெயரால் ஏற்பட்டுள்ளதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். எனவே இம்மலைக்கு பத்துமலை என்ற பெயர் ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

இவ்வாலயம் சுமார் 127 ஆண்டுகள் பழைமை வாய்ந்தது. கி.பி. 1891-ம் ஆண்டு தமிழகத்தைச் சேர்ந்த கே. தம்புசாமி பிள்ளை, பத்துமலைக் குகையில் 400 அடி உயரத்தில் சுப்பிரமணிய சுவாமியின் வேலினை நிறுவி, வழிபாட்டினைத் தொடங்கினார். முருகனின் அருளும், பக்தர்களின் கோரிக்கைகள் வேண்டுதல்களை நிறைவேற்றிய முருகனின் புகழ் மலேசிய மக்களிடம் வெகுவாக பரவியதால், மலேசிய மக்கள் ஜாதி பேதமின்றி, இயற்கையின் தெய்வமான முருகன் மீது அதீத காதல் வயப்பட்டு இத்தலத்து இறைவனை வழி பட்டு செல்கின்றனர்.

வேலாக மட்டும் காட்சியளித்த பத்துமலை முருகன் சன்னதி பக்தர்களின் முயற்சி மற்றும் கோவில் நிர்வாகத்தினரின் பெரும் உழைப்பால். பத்துமலை அடிவாரத்தில், விண்ணை முட்டுமளவு கம்பீரமாகவும், உலக அளவில் உயர்ந்த அளவான 140 அடி உயரத்தில் அமைக்கும் விதமாகவும், டான்ஸ்ரீ டத்தோ நடராஜா தலைமையில், 2006-ம் ஆண்டு ஜனவரி மாதம் உலகப்பிரசித்தி பெற்ற முருகனின் சிலை நிறுவப்பட்டது. இதை உருவாக்குவதற்கு மூன்று ஆண்டுகள் பிடித்தன. கட்டுமானச் செலவு 25 இலட்சம் மலேசிய ரிங்கிட். இந்தச் சிலையின் திறப்பு விழாவின் போது சுமார் ஒரு டன் எடை சாமந்திப் பூ மாலை சூட்டப்பட்டது. பளு தூக்கும் இயந்திரத்தின் உதவியோடு அந்த மாலை முருகப்பெருமானுக்கு அணிவிக்கப்பட்டது.

பத்துமலை ஸ்ரீ சுப்ரமணியர் கோவிலின் கலை ஓவியத்தை கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் இடம் பெறச் செய்ய முயற்சி நடந்து வருகிறது. இந்தச் சிலை ஏற்கனவே மலேசிய சாதனை புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது.

சிலையை உருவாக்குவதற்கு 1,550 கன மீட்டர் கட்டுமானப்பொருள், 250 டன் எஃகு கம்பிகள், பயன்படுத்தப்பட்டுள்ளது. முருகன் சிலைக்கு தங்க நிறத்தில் பூசப்பட்ட வண்ணக் கலவை தாய்லாந்திலிருந்து வரவழைக்கப்பட்டதாகும் மொத்தம் 300 லிட்டர் தங்கக் கலவை பயன்படுத்தப்பட்டன.

தமிழ்நாடு, திருவாரூரைச் சேர்ந்த சிற்பி ஆர்.தியாகராஜன் தலைமையில் முருகன் சிலை அமைக்கப்பட்டது. அவருக்கு உதவி யாக 14 சிற்பிகள் பணி புரிந்தனர். சிற்பி ஆர்.தியாகராஜன் மலேசியாவில் பல ஆலயங்களை நிர்மாணித்துள்ளார்.

இந்தச் சிலை உலகின் பார்வையை தற்போது

## ஆலயத்தை நிறுவியவர்



தம்புசாமி பிள்ளை (1850–1902) என்பவர், சிங்கப்பூரில் பிறந்தவர். வாழ்நாளில் பெரும் பகுதியை மலாயா தமிழர்களின் கலை கலாசாரங்களுக்கு அர்ப்பணிப்பு செய்தவர். சமயம், மொழி பார்க்காமல் தம் செல்வத்தை தர்ம சிந்தனையுடன் அள்ளிக் கொடுத்தவர். 1880களில் கோலாலம்பூர் தமிழர்களின் தலைவராக இருந்தவர்.

மலாயா சுதந்திரம் அடைவதற்கு முன்னால் கோலாலம்பூரில் மிகவும் பிரபலமாக விளங்கியவர். தமிழர் சமுதாயத்தின் தலைவராக மதிக்கப்பட்ட இவர், செல்வச் சிறப்புமிக்க வர்த்தகராக விளங்கியவர். ஈயச் சுரங்க உரிமையாளராகவும், அரசாங்க குத்தகையாளராகவும் இருந்துள்ளார். கிள்ளானில் பிரபலமாக விளங்கும் சிவன் கோயில், தம்புசாமி பிள்ளையின் குடும்ப நிலத்தில் கட்டப்பட்டது. பின்னர், அந்த நிலம் ஆலய நிவாகத்தினரிடமே நன்கொடையாக வழங்கப்பட்டது.

உலகத் தமிழர்களிடையே புகழ்பெற்று விளங்கும் பத்துமலை கோயிலை உருவாக்கியவர். கோலாலம்பூர் ஸ்ரீ மகா மாரியம்மன் கோயிலைத் தோற்றுவித்தவர். கோலாலம்பூர் விக்டோரியா பள்ளி நிறுவனர். மலாயா ஈயச்சுரங்க உரிமையாளர்களில் முதல் தமிழராகவும் விளங்கியவர் இவர். மலேசியாவில் பல்வேறு இந்து சமயக் கோயில்களை உருவாக்கிய பெருமைக்கு உரியவர்.

பத்துமலை முருகன் கோவிலுக்கு செல்லும் வழியில் இவருக்கு சிலை அமைத்து மரியாதை செய்துள்ளனர்.

பத்துமலை ஸ்ரீ சுப்ரமணியர் ஆலயத்தின் நிர்வாகத்தை ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலய தேவஸ்தானம் கவனித்து வருகிறது. இந்தத் தேவஸ்தானம் மலேசியாவில் பதிவு செய்யப்பட்ட ஒரு சமய அற நிறுவனமாகும். இது கோலாலம்பூர், ஜாலான் துன் எச்.எஸ்.லீ எனும் முகவரியில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மலேசியாவில் உள்ள இந்து அமைப்புகளில் ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலய தேவஸ்தானம் தான் மிக மிகப் பழமையானது.





mithumonthe.net



மலேசியாவின் பக்கம் திருப்பியுள்ளது. உலகிலேயே மிக உயரமான சிலை என்ற சிறப்பினையும் இந்தச் சிலை பெற்றுள்ளது. இந்த சிலையைக் காண்பதற்காகவே 2012ஆம் ஆண்டு தைப்பூசத் திருவிழாவில் 10 லட்சம் பக்தர்கள் கலந்து கொண்டனர்.

இதற்குப் பின் நடைபெற்ற தைபூச விழாக்கள் வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டு வருகிறது. உலகின் பல பகுதிகளில் இருந்து இத்தலத்து முருகனை வழிபட பக்தர்கள் வந்த வண்ணம் உள்ளனர். கிருத்திகை போன்ற விஷேச தினங்களில் சிறப்பு தினங்களாக விளங்குகின்றன.

இராமாயண குகை

பத்துமலையின் அடிவாரத்தில் கலைக்கூட குகை, அருங்காட்சியகக் குகையென இரு குகைக்கோயில்கள் உள்ளன. இந்தக் குகை மையங்கள் 2008 ஆம் ஆண்டு புதுப்பிக்கப்பட்டன. அவற்றில் முருகக் கடவுள் சூரவதம் செய்யும் காட்சிகள் அருங்கலை ஓவியங்களாக வரையப்பட்டுள்ளன. பத்துமலையின் இடது புறத்தில் இராமாயண குகை உள்ளது.

இந்த இராமாயண குகைக்குச் செல்லும் வழியில் 50 அடி உயரம் உள்ள ஓர் அனுமார் சிலையைக் காண முடியும். அனுமாரை குலதெய்வமாக வழிபடுவோருக்காக அங்கே ஒரு கோயிலும் கட்டப்பட்டிருக்கிறது. இந்தக் கோயில் நவம்பர் 2001இல் திறப்புவிழா கண்டது. இராமாயண குகையில் இராமரின் வாழ்க்கைத் தத்துவங்கள் அழகான ஓவியங்களில் சித்தரிக்கப்பட்டுள்ளன.

தற்போது இந்த இடம் உலகின் மிகப்பெரிய சுற்றுலா தலமாகவும் விளங்குவது கூடுதல் சிறப்பாகும்.

– ஆசிரியர் நாகராஜன்,
போன் 08825844033

# எளிய முறையில் இருதயத்தை காக்க...

தற்சமயம் இந்தியாவில் அதிகம் பாதிப்புக்குள்ளாகும் மக்களின் மிக முக்கிய பிரச்சனையாக திகழ்வது இருதய அடைப்பு பிரச்சனைதான்.

இதற்கு பலவகையான அறுவை சிகிச்சை முறைகள் இருந்தாலும், இயற்கையாகவே ஒருசில பழக்க வழக்கங்களில் இந்த இருதயநோய் பிரச்சனையை தவிர்க்கலாம். அந்த வகையில் ஒரு எளிமையான வைத்திய முறைதான் இது...

இதை நோய் கண்டவர்கள் மட்டும்தான் செய்ய வேண்டும் என்பதில்லை.

எதிர்காலத்தில் இருதய நோய் பிரச்சனை வரக்கூடாது என்று நினைப்பவர்கள் கூட இதை செய்யலாம்.

இருதய இரத்தக் குழாய் அடைப்புகளை திறக்க அருந்தும் பானத்திற்கு உரிய மூலப்பொருள்கள்.

1 கப் எலுமிச்சை சாறு
1 கப் இஞ்சிச் சாறு
1 கப் பூண்டு சாறு
1 கப் ஆப்பிள் சைடர் வினிகர்.

எல்லாச் சாறுகளையும் ஒன்றாக கலக்குங்கள். இலேசான இளஞ்சூட்டில் (சிம்மரில்) 60 நிமிடம் கொதிக்க வையுங்கள். நான்கு கப் மூன்றாக குறையும். சூடு ஆறியவுடன் சாறு இருக்கும் அளவுக்கு சம அளவு இயற்கைத் தேனை கலந்து ஜாரில் வைத்துக் கொள்ளுங்கள்.

நாள்தோறும் காலை உணவுக்கு முன் ஒரு டீஸ்பூன் பானத்தை அருந்துங்கள். சுவையாகவும் இருக்கும்.

நீங்களே உங்களை பைபாஸ் அறுவை சிகிச்சையிலிருந்து காப்பாற்றிக் கொள்ளுங்கள்.



அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: +91-8825844033

# மாயை என்றால் என்ன?

ஆபிரகாமிய மதம் என்று அழைக்கப்படுகிற யூதம், கிறிஸ்தவம், இஸ்லாம், பார்ஷி போன்ற மதங்களுக்கு சொராஸ்திரியம் என்ற மதம் தான் மூலமானது. இந்த மதத்தின் மைய கருத்து கடவுள் என்ற நல்ல சக்திக்கும் தீய சக்திக்கும் யுத்தம் நடந்து கொண்டே இருக்கிறது. இந்த யுத்தம் எப்போது முடியுமோ? அதாவது யுத்தத்தில் கடவுள் என்று வெற்றி அடைகிறாரோ? அன்று உலகத்தின் இறுதிநாளாக இருக்கும் உலக உயிர்களுக்கு தீர்ப்பு சொல்லும் நாளாக இருக்கும் என்று கூறப்பட்டிருக்கிறது.

இதில் வருகிற தீய சக்திதான் சாத்தான். இந்த சாத்தான் இல்லை என்றால் கடவுளுக்கு வேலை இல்லை. கடவுளின் மகத்துவத்தை யாரும் தெரிந்துகொள்ள முடியாது. இருட்டு இருந்தால் தானே வெளிச்சத்தின் அருமை தெரியும். எனவே வெளிச்சத்தின் மறு கூறான இருட்டு என்பது வெளிச்சத்தின் கூடவே இருப்பது என்பது போல சாத்தானும் கடவுள் கூடவே இருப்பதாகும். நாணயத்தின் ஒரு பக்கம் சாத்தான் என்றால் இன்னொரு பக்கம் கடவுள். இரண்டையும் பிரிக்க முடியாது. இரண்டும் சமபலம் வாய்ந்தவைகளாகும்.

மற்ற மதத்தில் சாத்தானுக்கு கொடுக்கபட்டிருக்கின்ற இடம் நமது இந்து மதத்தில் மாயை என்பதற்கு கொடுக்கபட்டிருக்கிறது என்று உறுதியாக சொல்லலாம். சாத்தான் இல்லை என்றால் சாத்தானை வென்றுவிட்டால் கடவுளை அடையலாம். என்பது போல மாயை என்பதை அறுத்துவிட்டால் கடவுளை அடையலாம். மனிதனுக்கும், கடவுளுக்கும் நடுவில் உள்ள திரை மாயை என்பதாகும். அபிரகாமிய மதம் கூறுகிற சாத்தான் தத்துவப்படி வெளி சக்தி அல்ல நமது மனதிற்குள் இருக்கின்ற இருட்டு பகுதியே ஆகும். மாயை என்பதும் மனதிலுள்ள இருட்டு தான்.

மாயை என்பது பற்றி மிக பழமையான கருத்தும் புதுமையான கருத்தும் ஒன்றே ஒன்று தான். மதிமயக்கம் என்பதே மாயை கயிறை பாம்பாக கருதுவதும் பாம்பை கயிறாக கருதுவதும், மதி மயக்கம் தருகின்ற மாயை பிரபஞ்சம் எங்கும் வியாபித்திருக்கும் பிரம்மம் என்ற கடவுள் என்றும், மாறாதவர் எப்போதும் மாறாதவர், ஆனால் இயற்கை மாறி கொண்டே இருக்கும் ஒரு காலத்தில் ஒன்றாக இருந்தது வேறொரு காலத்தில் மற்றொன்றாக இருக்கும். அதனால் உலகத்தின் ஆன்மா கடவுள் என்றால், உலகம் என்ற உடல் மாயை என்று அழைக்கப்படுகிறது. இயற்கை அன்னையை மாயா தேவி என்று பல உபநிஷதங்கள் மிகவும் அழகாக கூறுகின்றன.

இதன் காரணமாகத்தான் கடவுளை காண்பதற்கு திரையாக மாயை இருக்கிறது என்று பெரியவர்கள் கூறினார்கள். பாசி தண்ணீரை மறைப்பதை போலவும், தூசி கண்ணாடியை மறப்பதை போலவும், ஆடை உடலை மறைப்பதை போலவும் மாயை என்பது இறைவனை மறைத்து கொண்டிருக்கிறது. பாசியை விலக்கி விட்டால் தெளிந்த நீர் தெரிந்துவிடும். அதை போன்று நமது இதய கண்ணாடியில் படிந்து கிடக்கின்ற தூசியை துடைத்துவிட்டால் கடவுள் தெளிவாக தெரிவார்.

ஆதி சங்கரர் அத்வைத கொள்கையை உருவாக்கிய பிறகு தான் மாயை என்பதற்கு எந்த காலத்திலும் ஒப்புகொள்ள கூடிய மிக சிறந்த கருத்துக்கள் உருவாகின. நன்றாக உறங்கி கொண்டிருக்கின்றோம் திடிரென்று விழிப்பு ஏற்படுகிறது. அந்த விழிப்பு முழுமையான விழிப்பாக இல்லை அரைகுறையா இருக்கிறது. அந்த நேரத்தில் சுற்றுமுற்றும் பார்க்கிறோம் இது பகலா? இரவா? என்பது தெரியவில்லை. அந்த நேரத்தில் நம் மனதிற்கு பகல் என்று தோன்றினால் அதை நம்புகிறோம். அதை இரவு என்றால் அதையும் நம்புகிறோம் உண்மை எதுவென்று நமக்கு தெரிவதில்லை.

ஒற்றையடி பாதையில் தனிமனிதனாக நடந்து போகிறோம். நமக்கு பின்னால் யாரோ ஓடிவருகிற ஓசை கேட்கிறது. வருகிற வேகத்தில் நிச்சயம் நம் மீது மோதி விடுவார்கள் என்று அவசரப்பட்டு நாமும் ஓடுகிறோம். அப்போது பின்னால் வருவது மனிதனா? அல்லது மிருகமா? என்று தெரிவதில்லை. நம் காதுக்கு கேட்கின்ற சத்தத்தை வைத்து மிருகமென்றோ மனிதனென்றோ தெரிவதில்லை ஆனாலும் எதையாவது ஒன்றை நம்புகிறோம்.

நம்மை சுற்றி இருட்டு இருக்கிறது. இருட்டுக்குள்ளே நிழல் வடிவமாக சில உருவங்கள் தெரிகிறது. அந்த உருவங்கள் நமக்கு நன்மை செய்யுமா? தீமை செய்யுமா? என்று தெரியவில்லை. இருட்டினால் வருகின்ற அச்சம், அபாயம் இல்லாத பொருளை கூட அபாயம் உள்ளதாக காட்டுகிறது. அந்த கற்பனையை அப்படியே நம்புகிறோம்.

விழிப்பு நிலை வந்தபிறகு, அவசரம் முடிந்த பிறகு, பயம் கலைந்த பிறகு உண்மை நிலை தெரிகிறது. நமது தவறான அபிப்ராயத்தை எண்ணி வருத்தப்படுகிறோம். ஒன்றை இன்னொன்றாக கற்பனை செய்து கொள்ளும் மனோபாவம் தான் மாயை என்று சங்கரர் மிக தெளிவான விளக்கத்தை நமக்கு தந்தார். எனக்கு தெரிந்து இதுவரையில் அதற்கு மாறுபட்ட விளக்கத்தை யாரும் தரவில்லை என்று நான் நம்புகிறேன்.

மாயை என்பதை ஒருவித சக்தி என்றும், ஒருவித தத்துவம் என்றும் கூறுகிறார்கள். சுருக்கமாக கூறவேண்டுமென்றால், சுருக்கமாக சுலபமாக புரிந்துகொள்ள வேண்டுமென்றால் தவறாக அர்த்தப்படுத்தி கொள்ளும் ஒரு சக்தி என்று சொல்லலாம். மாயை என்ற இந்த உன்னதமான உணர்வை கடவுள் தத்துவத்திலும் பொருத்தி பார்க்கிறார்கள்.

அத்வைதிகள் கூறுகிறபடி மாயை இல்லாத நிதர்சனமான பொருளான பிரம்மம் பிரபஞ்சம் போல் நாம் காணுவது மாயை யாகும். அதாவது பிரம்மம் எந்த மாறுதலுமின்றி அப்படியே இருக்கிறது. மாயை பிரம்மத்தை மறைப்பதனால் பிரம்மம் பிரபஞ்சமாக உலகமாக தெரிகிறது. இல்லாத பிரபஞ்சம் இருப்பது போல காட்சி அளிக்கிறது.

பிரம்மம் என்பதை அதாவது கடவுள் என்ற சக்தியை பிரபஞ்சமாக தோன்ற செய்வதனால் மாயை என்பது இருக்கும் பொருளாகிவிடுகிறது. அத்வைத கொள்கைப்படி கடவுள் என்ற ஒன்றை தவிர வேறு எதுவுமே கிடையாது. அப்படியானால் மாயை கடவுளை மறைக்கிறது என்று கொண்டோம் என்றால் கடவுளோடு கூடவே மாயை என்ற இரண்டாவது பொருளும் இருப்பதாக கருதவேண்டும். ஆனால் இதற்கு அத்வைதம் மிக தெளிவான மறுப்பை நமக்கு கூறுகிறது. பிரம்மம் என்பது மறைக்கபட்டிருக்கின்ற உண்மை தெரியாத வரையில் தான் மாயை என்பது இருக்கிறது. கடவுளை மறைத்திருப்பது மாயை என்ற உண்மை விளங்கியவுடன் மாயை இல்லாமல் போய்விடுகிறது. கடவுள் மட்டுமே இப்போது இருக்கிறார். ஆகவே ஒன்று தான் இருக்கிறது என்ற அத்வைதம் மீண்டும் நிலைநிறுத்த படுகிறது.

அப்படியானால் இன்னொரு கேள்வியும் நமக்கு வருவதை தவிர்க்க இயலாது. கடவுளை மறைப்பது மாயை அதை உணர்ந்தவுடன் மாயை மறைந்து விடுகிறது. என்பதை ஏற்றுகொண்டால் உண்மையில் மாயை என்ற ஒன்று இருக்கிறதா? என்ற கேள்வி தானாக துளிர்விடுகிறது. இந்த கேள்விக்கு மிகசிறந்த ஞானி என்று போற்றப்படுகிற ஆதி சங்கரரே சற்று மழுப்பலான பதிலை தான் தருகிறார். அவர் கூறுகிறார் மாயை என்பது இன்னதென்று சொல்லப்படாத, சொல்ல முடியாத ஒரு சக்தி என்கிறார். எந்த வகையில் பார்க்க போனாலும் கடவுளுக்கு இணையாக மாயை என்பது இருக்கிறது.

கண்டிப்பாக மாயை என்ற தனிசக்தி உண்டு, அந்த சக்தி இல்லை என்றால் கடவுள் என்ற வெளிச்சத்தை கடவுள் என்ற ஞானத்தை நம்மால் புரிந்துகொள்ள முடியாது. பிரம்மம் என்பதும் மாயை என்பதும் ஒருநாணயத்தின் இரண்டு பக்கங்கள். இரண்டையும் பிரிக்க இயலாது, ஒன்றை ஒன்று மறைத்துக்கொண்டு நிற்கிறது. நீ வெளிச்சத்தை காணவேண்டும் என்றால் இருட்டை கடந்தே ஆகவேண்டும். இருட்டை உடைக்காமல், இருட்டை வெட்டி வீழ்த்தாமல் வெளிச்சத்தை தொட உன்னால் இயலாது. மாயை என்பது இருட்டு, மாயை என்பது அறியாமை, மாயை என்பது அகங்காரம் இவைகளை உடைத்தெரியாமல் ஞானம்



www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com

பெற்றுவிட முடியாது. கடவுளை அடைந்துவிட முடியாது.

மாயை என்பது நமது கண்களுக்கும் கருத்துக்களுக்கும் செய்யும் வர்ண ஜாலங்களை ஒருநிமிடம் சிந்தித்து பார்த்தால் மூச்சு நின்றுவிடுவது போல மலைப்பு வருகிறது. காலையில் கிழக்கு வானத்தில் சூரியனை பார்க்கிறோம் தங்க தாம்பாள தட்டு போல ஜொலி ஜொலிக்கிறது. கைகளை மடக்கி கால்களுக்கு இடையில் கொடுத்து கொண்டு மரவட்டை போல சுருண்டு படுத்து கிடக்கும் குழந்தையை அன்பான அன்னை தட்டி எழுப்புவது போல சூரிய கதிர்கள் நம் மேலே பட்டு காலை பொழுதை உற்சாக பொழுதாக நமக்கு மாற்றி தருகிறது.

மதிய நேரம் சூரியனை பார்க்கிறோம் காலையில் பார்த்த அளவு இப்போது பெரியதாக இல்லை. சிறியதாக இருக்கிறது, உச்சியில் இருக்கிறது காலையில் வந்த இளம் கதிர் ஒன்றை கூட இப்போது அதனிடம் காணமுடியவில்லை. ஜொலித்த சூரியன் இப்போது தகிக்கிறான், வெறும் காலுடன் நடக்க முடியாமல் மண்ணை சூடாக்குகிறான். மரங்களை, மலர்களை வாடவைக்கிறான். உடம்பில் வியர்வை கொப்பளிக்க மனிதர்கள் சோர்ந்து சுருண்டு போகிறார்கள்.




மாலை வருகிறது மேற்கு வானத்தில் சூரியன் தெரிகிறான். காலையில் இருந்தது போலவே இப்போதும் பெரியதாக காட்சி அளிக்கிறான். சிறிய மாற்றம் அப்போது வெள்ளை நிறம் இப்போது மஞ்சள்நிறம் அவனிடமிருந்து விதவிதமான வர்ணஜால கதிர்கள் வெளிப்பட்டுகொண்டே இருக்கிறது. கற்பனை குதிரை முட்டி மோதி பறந்து போகும் அளவிற்கு எண்ணற்ற வண்ணங்களை மேற்கு வானத்தில் வாரி இறைக்கிறான் சூரிய தேவன். உழைத்து களைத்துபோன மக்களுக்கு உடம்பை பிடித்து விடுவதை போல உடம்பை வருடி கொடுப்பதை போல இதமான குளிர்ச்சியான கதிர்களை தருகிறான்.

இப்படி மூன்று பொழுதிலும் மூன்றுவிதமாக தெரிகின்ற சூரியன் எப்போதும் மாறுவதில்லை. பூமி சுழற்சியானது சூரியன் மாறியதை போல நமக்கு காட்டுகிறது. போலியான மாயை காட்சியை நமது புலன்கள் உண்மை என்று நினைத்து அனுபவித்து மகிழ்கின்றன. தூரத்தில் மலையை பார்க்கிறோம் சின்னஞ்சிறியதாக கையில் தூக்கி விளையாடும் பந்துபோல தெரிகிறது. பக்கத்தில் சென்று பார்த்தால் காடும், அருவிகளும், குன்றுகளும் பார்ப்பதற்கே பயங்கரமாக இருக்கிறது. இது நமது பார்வை குற்றமா? மழையின் மீது குற்றமா?

மாயை வசப்பட்ட நமது புலன்கள் எந்த அளவு பொய் சொல்கிறது என்பது நமக்கு தெரியும். ரயில் பயணத்தில் மரங்கள் ஓடுவதும், கானல் நீர் கண்ணுக்கு குளிர்ச்சியாக தெரிவதும் அருமையான மாயை வித்தை தானே, நமது கண்கள் மட்டுமா மாயை விரிக்கின்ற வலையில் விழுந்து மயங்கி கிடக்கிறது. நமது மனம் என்ன அறிவு கையில் குழந்தை போலவா தாலாட்டப்பட்டு கிடக்கிறது. மனம் எனும் குரங்கு தான் மாயை வசமாக கிடக்கும் மிகப்பெரிய மிருகம். அந்த குரங்கு ஆடுகிற ஆட்டம் தான் உள்ளதை இல்லாததாகவும், இல்லாததை இருப்பதாகவும் காட்டுகிறது.

இனிப்பு பண்டங்கள் எனக்கு பிடிப்பது கிடையாது அதை சாப்பிட்டால் திகட்டு வது போல இருக்கும் கூடியமான வரையில் இனிப்பை குறைவாக எடுத்துகொள்வேன். விருந்துக்கு பிறகு பாயாசம் பரிமாறப்பட்டால் கூட சாஸ்திரத்திற்காக அதை தொட்டு கொள்வேனே தவிர இன்பமாக எடுத்து கொள்ள மாட்டேன் என்று கூறுகின்ற பலர் உனக்கு சர்க்கரை நோய் வந்துவிட்டது இனி இனிப்பு பலகாரங்களை தொடக்கூடாது என்று மருத்துவர் கூறியவுடன் லட்டு உருண்டைக்காக ஏங்கி தவிப்பதும், அல்வா துண்டுக்காக அலைந்து கொண்டிருப்பதும் நாம் பார்க்கின்ற விந்தையாகும்.

சாதாரணமாக உட்கார்ந்திருந்தால் நேரம் போவதே தெரியாது. இப்போது தான் உட்கார்ந்தது போல் தெரிகிறது அதற்குள் இரண்டு மணிநேரம் ஆகிவிட்டதா? என்று தோன்றுகிறது.

அதே வேளை நமது அன்புக்குரியவர் யாரவது ஒருவருக்காக காத்திருக்கிறோம் என்றால் அந்த காத்திருக்கின்ற நேரம் யுக கணக்காக தோன்றுகிறது. பத்துநிமிடம் நகர்வதற்கே பத்துமணிநேரம் ஆனது போல் ஆகிவிடுகிறது.

எனவே மாயை என்பது நமது சூழ்நிலையை மாறுதலடைவது போல செய்கிறது. நமது



புலன்களை உண்மைக்கு புறம்பானதாக நம்ப வைக்கிறது. நமது மனதை தனது விருப்படி ஆட்டி வைக்கிறது. எல்லாமே பொய்யான காட்சிகளாக, நம்பமுடியாத சூழ்நிலையாக மாயை காட்டுகிறது. நாம் காணுகிற காட்சிகள் எல்லாம் மாயை காட்சிகளே! ஒரு பந்தத்தை உயரத்தில் தூக்கி பிடித்து வட்டமாக சுற்றினால் நெருப்பு வட்டம் இருப்பது போல தெரிகிறது. உண்மையில் நெருப்பு வட்டமில்லை ஆனால் அப்படியொரு மாய காட்சி உண்மை போல தோற்றம் அளிக்கிறது. ஒரு முப்பட்டை கண்ணாடியில் வெள்ளைநிற வெளிச்சத்தை செலுத்தினால் வானவில்லின் எழு வர்ணங்கள் தெரிவது போலவே பல அழகிய நிறங்கள் தெரிகிறது.

இதை போலவே தான் கடவுள் என்ற பிரம்மம் மாயை வசத்தால் உலகமாக உலகத்தின் பல வடிவமாக நமக்கு தோன்றுகிறது. நாம் கடவுளை கண்ணால் காண்பது இல்லை. மாயை என்பதையும் கண்களால் பார்ப்பது இல்லை. நாம் பார்ப்பது உலகத்தை மட்டுமே உலகத்தில் தெரிவது ஒவ்வொன்றும் வானவில்லின் நிறங்களை போல வெறும் பொய்யான தோற்றங்களே ஆகும். இதை பொய்யென்று நிஜமாகவே உணர்ந்து அதாவது பிரம்மம், பிரபஞ்சம், மாயை என்பனவற்றின் உண்மை தத்துவத்தை உணர்வதே மோட்சம் என்று நமது முன்னோர்கள் அழகாக சொன்னார்கள்.

ஆதிசங்கரரை போலவே கௌதம புத்தரும் நாம் காணுகிற காட்சிகள் எல்லாமே பொய்யென்று கூறுவார். இருவரும் கூறுகிற வார்த்தை ஒன்றாக இருக்குமே தவிர சொல்லுகிற விதம் வேறு வேறு. அதற்கான விளக்கங்களும் வேறு வேறு. காண்பது எல்லாம் காண்பவனின் அறிவில் இருப்பவையே ஆகும். உலகம் என்பது மனதில் ஓடுகின்ற பிரவாகம் ஆகும். பார்க்கின்ற நேரமெல்லாம் தர்மங்கள் என்ற மூலபொருள் மாறிக்கொண்டே இருக்கிறது. இப்படி மாறும் பொருட்களை கொண்டதே உலகம். இறுதியில் இருப்பது மஹா சூன்யம் மட்டுமே என்று புத்தர் கூறுகிறார். மாயை என்று சங்கரர் கூறுவதும் சூன்யம் என்று புத்தர் சொல்வதும் பெரிய வித்தியாசம் இல்லை.

காண்பது எல்லாமே பொய் என்பது அதாவது மாயை என்பது மதத்திற்கு மட்டும் உள்ள கொள்கை அல்ல. மதங்களே போலியானது கற்பனையானது என்று கூறுகிற விஞ் ஞானத்திற்கும் மாயாவாதம் என்பது உயிர் நாடியாக இருக்கிறது. இல்லாததை போல் இருக்கும் இல்லாததை தேடுவதில் தான் கண்டுபிடிப்புகள் இருக்கின்றன. மாயை விலக விலக தான் உண்மைகள் தெரியவரும். விஞ்ஞானத்தில் கண்டுபிடிப்புகள் என்று சொல்வதும், மெய்ஞானத்தில் உண்மைகள் என்று சொல்வதும் பெரிய வித்தியாசம் இல்லை. ஆக விஞ்ஞானப்படியும் மெய்ஞானப்படியும் மாயை வென்றாக வேண்டும். இதை வெல்ல ஏதாவது வழி இருக்கிறதா?

கண்ணன் கீதையில் சொல்கிறான் உடலெடுத்த உயிர்கள் அவர்களுக்கு உதித்த முக்குணங்களிருந்து மாயையிலிருந்து விடுப்பட்டது என்பதே கிடையாது. மண்ணுலக மனிதர்களும் விண்ணுலக தேவர்களும் மாயை வசப்பட்டவர்களே ஆவார்கள். என்று பதினெட்டாவது அத்தியாயத்தில் கூறுகிற கண்ணன் அதற்கான பதிலை ஏழாவது அத்தியாயத்திலேயே தந்துவிடுகிறான். மாயை விலக வேண்டுமென்றால் மாயை உன்னை தீண்ட கூடாது என்றால் என்னையே சரணடை என்று சரணாகதி தத்துவத்தை பேசுகிறான்.

கண்ணன் கூறுவது தான் சத்திய வாக்கு என்னால் எதுவுமில்லை, என்னால் எதுவும் முடியாது, நான் எதற்கும் ஆனவன் அல்ல, எல்லாம் வல்லவன் நீ, நீயே அனைத்தும் அறிந்தவனாக இருக்கிறாய். உன்னிடம் என்னை முழுமையாக ஒப்புவித்து விட்டேன் எனது மனம் எனது புலன் எனது உடல் எல்லாமே உனக்கு அர்ப்பணம் அதை என்னவேண்டுமானாலும் செய், எப்படி வேண்டுமென்றாலும் ஆட்டுவித்துக் கொள் நான் சரணடைகிறேன் என்று முற்றிலும் கண்ணனின் பாதத்தை பற்றிகொண்டால் மாயை என்பதே இல்லாதது ஆகிவிடும். அனைத்தும் கண்ணனின் லீலை என்கிற போது மாயை என்பது ஏது? கண்ணனும் அவனது விளையாட்டும் மாயை என்பது போல தோன்றினாலும், மாயை என்பதும் தெய்வீக மானதாக மாறிவிடும்.

எனவே மாறுபட்ட காட்சி கூறுபட்ட கோலம் என்பவைகளை மறந்துவிட்டு எல்லாமே அவன் செயல் என்றால் மாயை என்பது இல்லாமல் போய்விடும்.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 9442426434

# இவர்கள் அவசியமானவர்கள்

“1980களில் நான் கல்லூரியில் படிக்கும் கால கட்டத்தில் பாதிப்பேர் இந்துக்கள் அடங்கிய எங்கள் கல்லூரியில் உச்சகட்ட மதமாற்றப் பிரச்சாரம் நிகழும்.

கிறிஸ்தவர்கள் இஸ்லாமியர்கள் இருசாராருமே இந்துக்களை நோக்கி ‘உங்களுக்கு வெறும் சடங்குகளும் ஆசாரங்களும் மட்டுமே உள்ளன. உங்கள் மதத்தில் ஞானநூல்கள் இல்லை. எங்களுக்கு மெய்நூல்கள் உள்ளன’ என வாதிடுவார்கள்.

நான் உட்பட எந்த இந்து மாணவனுக்கும் இந்துமதநூல்களைப்பற்றி பெரிதாக ஏதும் தெரியாது. இந்து தத்துவமோ ஆன்மீகமோ தெரியாது. உண்மையிலேயே அப்படி ஏதுமில்லை என்பதே எங்கள் நம்பிக்கையும்.

அவர்களுடன் எப்போதும் இணைந்து கொண்டு செயல்படும் திராவிடர் கழகமும் அதையே சொல்லும். புராணக்கதைகளை எடுத்துக் கொண்டு அதை மிக எளிய அன்றாடத்தளத்தில் வைத்து ‘கட்டுடைப்பார்கள்’. சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் பிறந்தவன் ஐயப்பன் என்றால் அவர்கள் ஓரினச்சேர்க்கையா செய்தார்கள் என்பதுபோன்ற பகுத்தறிவுக் கேள்விகள்.

இந்த தாக்குதல்களுக்குப் பதில்சொல்ல மரபான மடாதிபதிகளால், மதப்பிரச்சாரகர்களால் இயலவில்லை. ஏனென்றால் அவர்களும் சடங்குகள், புராணங்களுக்குள் மட்டும் செயல் பட்டவர்கள்தான். நவீனச் சிந்தனைகளுடன் அறிமுகம் அற்றவர்கள்.

ஒருமுறை நான் இந்தப் பகுத்தறிவுக் கேள்விகளைப்பற்றி ஆழ்ந்த ஐயத்துடன் கிருபானந்தவாரியாரிடம் விளக்கம் கேட்டேன். முருகனின் வேல் உங்களை காப்பாற்றும், அதை வழிபடுங்கள் போதும் என்று பதில் சொன்னார்

ஆன்மிகமும் தத்துவமும் அறிந்த சிலர் இருந்தனர், அவர்களை மிகச்சிறிய வட்டத்திற்குள் மட்டுமே அறிந்திருந்தனர். பெரும்பான்மையை நோக்கிச்செல்ல அவர்களிடம் ஊடகம் இல்லை, அமைப்பு இல்லை. இந்துமதம் சார்ந்து அமைப்புக்களை உருவாக்குவது எளிதும் அல்ல.

இச்சூழலில்தான் கார்ப்பரேட் சாமியார்கள் வருகிறார்கள், குறிப்பாக ஜக்கி வாசுதேவ், வேதாத்ரி மகரிஷி, மற்றும் ரவிசங்கர். “இந்து மதத்திற்கு நூல்கள் ஏதேனும் உண்டா?” என டிஜிஎஸ் தினகரன் நாகர்கோயிலில் பல்லாயிரம்பேர் கூடிய மாபெரும் கூட்டத்தில் அறைகூவியதை நான் நினைவுகூர்கிறேன்.

இன்று அதே மைதானத்தில் தான் ஜக்கி பல்லாயிரம்பேரைக் கூட்டி பதஞ்சலி யோக சூத்திரம் பற்றியும் உபநிடதங்கள் பற்றியும் பேசுகிறார். இப்படி ஒரு காலம் வந்துள்ளது.

இன்று மேலே சொன்ன இந்து எதிர்ப்புப் பிரச்சாரத்தை ஓர் இந்து இளைஞனிடம் சொல்லமுடியுமா?

உன்னதமான யோகநூல்களும் தத்துவநூல்களும் காவியங்களும் இந்துமதத்தில் உள்ளன என்று ஒருவனாவது எழுந்து பதில் சொல்வான். பதஞ்சலியோகசூத்திரம் என்றும் யோகவாசிஷ்டம் என்றும் உபநிடதங்கள் என்றும் எடுத்துச் சொல்வான்.

“நம் நாட்டில் உள்ள மதமாற்ற அமைப்புகள் அனைத்துமே செல்வமும், அதிகாரமும், சர்வதேசத் தொடர்புகளும், அறிவுலகில் ஐந்தாம்படை வலையும் கொண்டவை. அந்த அமைப்புக்கள் உருவாக்கிய கருத்துப்பிரச்சாரத்தை, அதிலுள்ள அப்பட்டமான திரிபுகளையும் காழ்ப்புகளையும் கொஞ்சமேனும் எதிர்ப்பதற்கு இன்னொரு அமைப்பால் மட்டுமே முடியும். இன்றிருப்பவை ஜக்கி வாசுதேவ், ரவிசங்கர் போன்றவர்களின் ஒரிரு அமைப்புக்கள்தான். இன்னமும் பல அமைப்புக்கள் உருவாகவேண்டும்”



மாதம் இரண்டு முறை
இலவசமாக வெளிவரும்
“ஆன்மிகமலர் மெயில் புத்தகம்”
பெற உங்கள் இமெயில் முகவரியை
கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி
வையுங்கள்
whats-app no: 7299992699
aanmeegamalar@gmail.com

aanmeegamalar.com
இணையதளத்தின் செய்திகளை
dailyhunt
மொபைல் அப்பில் உடனுக்குடன்
தெரிந்து கொள்ளலாம்.

ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தின்
அனைத்து புத்தகங்களையும் படித்து
மகிழவும் டவுன்லோடு செய்யவும்
www.aanmeegamalar.com
MAGZTER
DIGITAL MAGAZINE STORE
TAP · READ · ENJOY
இணையதளங்களை பார்க்கவும்...

www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com



இந்த இடத்துக்கு வந்து சேர இருபதாண்டுக் காலமும் அமைப்புசார்ந்த மாபெரும் பிரச் சாரமும் தேவைப்பட்டுள்ளது.

நாகர்கோயிலிலேயே எட்டாண்டுகளுக்கு முன் ஒரு பொதுக்கூட்டத்தில் ஐயப்பனைப்பற்றி அதே பழைய பகுத்தறிவு நையாண்டியைப் பேசிய பழைய கறுப்புச் சட்டைக்காரரிடம் 18 வயதான ஓர் இளைஞன் எழுந்து 'சிவன் யோகசக்தி. விஷ்ணு போக சக்தி. இரண்டும் இணைந்து உருவானதே ஐயப்பன். அது குறியீட்டு முறையில் சொல்லப்பட்டுள்ளது. உலகம் முழுக்க எல்லா ஞானமரபுகளிலும் குறியீடுகள் உள்ளன, உளறாதீர்கள்' என பதில் சொன்னான்.

கறுப்புச்சட்டை பரிதாபமாக "தம்பி நீ இங்கர் சால், கார்ல்மார்க்ஸ், பெரியார்லாம் படிக்கணும்' என்றார்." அதெல்லாம் பழைய சிந்தனைகள். நீங்க முதல்ல ஜோசஃப் கேம்பல் படியுங்க. சிமியாலஜின்னு ஒண்ணு இருக்கு, போய்ப் படியுங்க. குறியீட்டை குறியீடா பாக்கிறது எப்டின்னு தெரிஞ்சுட்டு பேசுங்க. உளறாதீங்க' என்றான்

'அட!' என வியந்தேன். அவனை அழைத்துப் பேசினேன். அவன் பேசியது அப்படியே நாகர் கோயிலில் ஜக்கி வாசுதேவ் அக் கேள்விக்குச் சொன்ன பதில் என அறிந்தேன். கார்ப்பரேட் குருமார்களைப்பற்றிய என் எண்ணம் அப்போதுதான் பெரிய அளவில் மாறியது.

இதற்குத்தான் கார்ப்பரேட் அமைப்பு. நானும் இதே விஷயங்களைச் சொல்லலாம். ஆனால் ஐம்பதாயிரம்பேரைச் சென்றடைய முடியாது. ஜக்கி வாசுதேவின் அமைப்புதான் அந்த அடிப்படைச் சிந்தனைகளை ஐந்து கோடிப்பேரிடம் கொண்டு சென்று சேர்க்கமுடியும்.

இங்கே இந்துச் சிந்தனைகளையும் பண் பாட்டையும் கொச்சைப்படுத்தி பேசிவருபவர்கள் ஐம்பதாண்டுகளுக்கு முன்னரே அமைப்பாகத் திரண்டவர்கள். ஈவெரா ஊர் ஊராகப்போய் நிதி திரட்டினார். எடைக்கு எடை நன்கொடை பெற்றுக்கொள்ள ஊர்தோறும் தராசில் அமர்ந் தார். அந்தப்பணத்தால் பேச்சாளர்களை உரு வாக்கி ஊர்தோறும் அனுப்பினார். இன்றும் அது ஜக்கிவாசுதேவ் அமைப்பை விட பலமடங்கு வலுவான செல்வமும் அரசியல் ஆதரவும் கொண்ட அமைப்பு.

இங்குள்ள மதமாற்ற அமைப்புகள் அனைத்துமே மிகப்பிரம்மாண்டமானவை. செல்வமும், அதிகாரமும், சர்வதேசத் தொடர்புகளும், அறிவுலகில் ஐந்தாம்படைவலையும் கொண்டவை. அந்த அமைப்புக்கள் உருவாக்கிய கருத்துப்பிரச்சாரத்தை, அதிலுள்ள அப்பட்டமான திரிபுகளையும் காழ்ப்புகளையும் கொஞ்சமேனும் எதிர்ப்பதற்கு இன்னொரு அமைப்பால் மட்டுமே முடியும்.

இன்றிருப்பவை ஜக்கி வாசுதேவ், ரவிசங்கர் போன்றவர்களின் ஓரிரு சின்ன அமைப்புக்கள்தான். இன்னமும் உருவாக வேண்டும்.

இங்கு இந்துமதம் மீது காழ்ப்பை வளர்க்கும் அத்தனை அமைப்புக்களையும் அவற்றின் அத்தனை ஊழல்களுடன், அத்தனை குற்றக் கறைகளுடன் அப்படியே ஏற்றுக்கொண்ட கும்பல் கள்தான் இப்போது ஓரளவு உருவாகி வரும் இந்த அமைப்புக்கள் மீது அவதூறுகளையும் கக்கிக் கொண்டிருக்கின்றன.

இது எவ்வகையிலும் அறம் சார்ந்ததோ, எதிர்க்கருத்தியல் சார்ந்ததோ அல்ல. வெறும் பதற்றம் மட்டுமே. ஒரு சின்ன அவதானிப் பைப் பாருங்கள். ஒருநாளில் உங்கள் தொலைக் காட்சியில் நீங்கள் பார்க்கக்கிடைக்கும் மதப்பரப்பு தொலைக்காட்சிகள் எத்தனை! கிறிஸ்தவ, இஸ்லாமிய அமைப்புக்கள் எவ்வளவு! எவ்வளவு பிரம்மாண்டமாக ஒருங்கிணைக்கப்பட்டவை அவை! எத்தனை செல்வம்!

ஜக்கிக்கோ ரவிசங்கருக்கோ ஒரு தொலைக் காட்சி ஊடகம் இன்றில்லை. அதற்கான நிதி அவர்களிடம் இல்லை [எப்படியாவது நிதி திரட்டி அவர்கள் ஒன்றை அமைக்கவேண்டும் என்பது என் வலுவான கோரிக்கை]

அந்த அமைப்புக்கள் அனைத்தையும் ஏற்றுக் கொள்ளும் நம்மூர் முற்போக்குப் பகுத்தறிவுக்கு இந்தச் சின்ன அமைப்புக்கு எதிராக மட்டும் ஏன் இத்தனை காழ்ப்பு? மிக எளிய பதில் இதுதான், ஐயப்பனைப்பற்றி பேசிய அந்த இளைஞன் இங்கு உருவாகி வந் திருக்கிறானே, அவனை கண்டுதான் இவை அஞ்சுகின்றன."

– **ஜெயமோகன்** (எழுத்தாளர்) இது இந்து தேசம்







# ஸ்ரீ ஷீரடி பாபா விக்கிரகத்திற்கு தேவையான கல்லை அனுப்பிவைத்த பாபா

ஸ்ரீ ஷீரடி பாபா கோயிலில் 36 வருடங்களாக பாபாவின் புகைப்படத்தை வைத்துதான் பூஜை செய்து வந்தனர்.

அப்பொழுது ஒரு நாள் இத்தாலியில் இருந்து வெள்ளை பளிங்குக் கல் ஒன்று பம்பாய் துறைமுகத்திற்கு இறக்குமதி ஆனது.

ஆனால் அந்தக் கல் எதற்கு வந்தது, ஏன் வந்தது என்று யாருக்கும் தெரியாது. அதை இறக்குமதி செய்தவரைப் பற்றிய விவரங்களும் இல்லை, அதை அவர் வாங்கவும் வரவில்லை.

சிறிது நாட்கள் கழித்து துறைமுக அதிகாரிகள் அதனை ஏலத்தில் விட ஏற்பாடு செய்தனர்.

இதை அறிந்த சாய் சன்ஸ்தான் அதிகாரி அதை ஏலத்தில் எடுத்து அதை பம்பாயில் உள்ள பாலாஜி வஸந்த் தாலிம் என்னும் சிற்பியிடம் பாபாவின் கருப்பு வெள்ளை புகைப் படத்தை அளித்து அதே மாதிரி சிலை செய்ய கூறினார்.

அந்தப் புகைப்படம் தெளிவாக இல்லாததால் சிற்பி தாலிம் மிகவும் கஷ்டபட்டார். இதனால் சிலை செய்வதற்கு சிறிது கால தாமதம் ஆனது. அந்த சயயத்தில் ஒரு நாள் ஸ்ரீ ஷீரடி பாபா சிறிபியின் கனவில் தோன்றி அவருடைய முகத்தை பலவித கோணங்களில் காட்டி சிற்பியின் கஷ்டத்தைப் போக்கி அவரை உற்சாகப்படுத்தினார்.

இதனால் உற்சாகமடைந்த சிற்பி, தெளிவு பெற்று மிகவும் சிறப்பாக எல்லோரும் எதிர்பார்த்தது போல் மிகவும் அழகாகச் செய்து கொடுத்தார். பின்னர் அந்த சிலை அக்டோபர் மாதம் ஏழாம் தேதி 1954ம் ஆண்டு (07.10.1954) அன்று ஸ்ரீ ஷீரடி கோவிலில் பிரதிஷ்டை செய்தார்கள்.

"அந்த பளிங்கு கல்லில் தன் சிலையை செய்வதற்காக பாபாதான் அனுப்பிவைத்தார்" என்று பக்தர்கள் மத்தியில் பரவசத்துடன் பேசிக் கொண்டனர்.

# மின்னூல் வடிவத்தில்

ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தின்
அனைத்து பிரதிகளையும் படித்து மகிழ...

ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்

www.aanmeegamalar.com

MAGZTER
DIGITAL MAGAZINE STORE
TAP · READ · ENJOY

இணையதளங்களை பார்க்கவும்...

aanmeegamalar.com
இணையதளத்தின் செய்திகளை

உலகின் அனைத்து
மொழிகளிலும்
செய்திகளைத் தரும்

dailyhunt

மொபைல் அப்பில் உடனுக்குடன்
தெரிந்து கொள்ளலாம்.